Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 புரட்டாதி 10 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 றஜப் 29 (27.09.2003) சனிக்கிழமை இதழ்:357

கர்ப்பிணி தாய்மாருக்கும், சிறார்களுக்கும் ஏற்ற போஷாக்கு நிறைந்த சத்து மா



ஜீவாகாரம்

அண்ணா தொழிலகம்

இணுவில் (சி-1428) T.P.-2223565

## தமிழர் தாயகப் பிரதேசமெங்கும்

# தியாகி திலீபன் நினைவுநாள் நிகழ்வு உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிப்பு!

### அன்றாடக் கடமைகளை நிறுத்தி மக்கள் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

**தியாகதீபம் லெப்ரினன்ட் கேணல் திலீபனின் 16 ஆவது ஆண்டு நினைவு நாள் இறுதி நிகழ்வுகள், தமிழர் தாயகப் பிரதேசமெங்கும் நேற்று உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.**

தியாகி திலீபனின் நினைவுநாளை முன்னிட்டு நேற்று அரச, அரசார்பற்ற நிறுவனங்கள், பாடசாலைகள், கூட்டுறவு அமைப்புக்கள், தனியார் கல்வி நிலையங்கள், வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன.

கோட்ட ரீதியாக இடம்பெற்ற நினைவுநாள் நிகழ்வில், ஊழியர்கள், மாணவர்கள், பொதுமக்களென பல்லாயிரக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

இறுதிநாள் நிகழ்வுகளின் பிரதான நிகழ்வு, நல்லூரில் தியாக தீபம் திலீபன் உண்ணாவிரதமிருந்த ஆலய முன்றலில் நடைபெற்றது.

தியாக தீபம் திலீபனின் நினைவுத்தூபி அமைந்துள்ள இடத்தில் அஞ்சலி நிகழ்வுகள் ஆரம்பமாகின. முதலில் திலீபனின் உருவப்படத்திற்கு ஈகச்சுடரை மாவீரர் ஒப்பிலாமணியின் தந்தையாரும், இந்துமத குரு ஒருவரும் ஏற்றிவைத்தனர்.

முன்னாள் மாநகர ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம், யாழ்.மாவட்ட

(10 ஆம் பக்கம் பார்க்க)



தியாகி திலீபனின் திருவுருவப் படத்துக்கு மலர்மாலை அணிவிக்கப்படுகிறது.

### வவுனியா - செட்டிக்குளம் பகுதியில்

## திலீபனின் நிகழ்வுக்குச் சென்றோரை தடுத்துநிறுத்த முற்பட்ட படையினர்!

வவுனியா - செட்டிக்குளம் பொது மைதானத்தில் நேற்று நடந்த தியாகி திலீபனின் நினைவுநாள் நிகழ்வில் கலந்துகொள்ளச் சென்ற பொதுமக்கள் மற்றும் மாணவர்களை படையினர் தடுத்துள்ளனர்.

மாணவர்களையும் தனியாகச் சென்ற மக்களையும் காவலரண்களில் நின்ற படையினர், நிகழ்வில் கலந்து கொள்ளவிடாமல் தடுத்ததோடு, அவ்வாறு செல்வதென்றால் பெயர் விபரங்களை தம்மிடம் பதிந்துவிட்டுச் செல்லுமாறும் கூறியுள்ளனர்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த மக்கள் - வவுனியா போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவினருக்கு அறிவித்தனர். கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகள் படையதிகாரிகளோடு தொடர்புகொண்டு கேட்டபோது தாம் மக்களைத் தடுக்கவில்லை என அவர்கள் கூறியுள்ளனர்.

கண்காணிப்புக் குழுவினர் படையதிகாரிகளுடன் தொடர்புகொண்டு கேட்டபின்னர், நிகழ்வில் கலந்து கொள்ளச் சென்ற மக்களை படையினர் தடுத்துநிறுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (03)

### விண்ணாணம் விநாசியர்



கண்காணிப்புக்குழுவுக்கு கண்ணாம் பூச்சி விளையாட்டுக் காட்டினமோ?

### எமது திருத்த யோசனையை அரசு ஏற்றுக்கொண்டால்

# பேச்சை ஆரம்பிப்பது குறித்து சாதகமாகப் பரிசீலிக்கப்படும்!

### மட்டு - அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஷ்



கண்காணிப்புக்குழு பிரதிநிதியை வரவேற்கிறார் தளபதி ரமேஷ்

இடைக்கால நிர்வாகசபை தொடர்பாகத் தயாரிக்கப்பட்டுள்ள விடுதலைப் புலிகளின் பதில் யோசனைகள் விரைவில் அரசிடம் கையளிக்கப்படும். அதனடிப்படையில் அரசாங்கம் பேச்சு நடத்த முன்வந்தால், பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பது குறித்து எமது தலைமைப்பீடம் சாதகமாகப் பதிலளிக்கும் என்றும், தடைப்பட்டுப்போயுள்ள சமாதானப் பேச்சு வார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு தலைமை மிகுந்த ஆர்வத்துடன் உள்ளதாகவும் மட்டு - அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஷ் தெரிவித்தார்.

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைமையகத்தைச் சேர்ந்த நோர்வே அரசியல் ஆலோசகர் ஜியஸ் சேபர்டை கரடியனாறு 'தேனகம்' விடுதியில் சந்தித்து உரையாடியபோதே ரமேஷ இவ்வாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட தற்போதைய நிலைமை குறித்து நேரடியாக ஆராயும்பொருட்டு, இரண்டுநாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு சேபர்ட் நேற்றுமுன்தினம் மாலை மட்டக்களப்பைச் சென்றடைந்தார்.

## வலி.வடக்கு மக்களின் மீள்குடியமர்வு; எம்.பிக்களுடன் நாளை ஆலோசனை!

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கு உயர்பாதுகாப்பு வலயங்களில் இருந்து மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் குறித்து வலி.வடக்கு பொதுஅமைப்புக்களின் ஒன்றியப் பிரதிநிதிகள், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்தாலோசனை நடத்தவுள்ளனர்.

நாளை காலை 10 மணிக்கு தெல்லிப்பளை பலநோக்கு கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ரெலோ ஆகிய கட்சிகளைச் சேர்ந்த யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ள விருப்பதாகத் தெரியவருகிறது.

வலி.வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்வது தொடர்பாக இதுவரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் எந்தவித பலனையும் தராதது குறித்தும், இடம்பெயர்ந்த மக்கள் தொடர்ந்து எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் இக்கூட்டத்தில் ஆராயப்படும் எனத்தெரியவருகிறது.

## இனந்தெரியாதோரின் சூட்டுக்கு குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழப்பு!

### அம்பாறை - பாண்டிருப்பில் சம்பவம்

அம்பாறை மாவட்டம் கல்முனை பாண்டிருப்பில் நேற்றிரவு 8.00 மணியளவில் இனந்தெரியாத நபர்கள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் வேலுப்பிள்ளை யோகேந்திரன் வயது (29) என்ற இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

அரசாங்கப் பாடசாலை ஒன்றில் ஆய்வுகூட ஊழியராக பணியாற்றும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பி. - சுதந்திரக்கட்சி கூட்டு; இன்று மீண்டும் கலந்துரையாடல்!

(கொழும்பு)

ஜே.வி.பிக்கும் சுதந்திரக் கட்சிக்கும் இடையில் கூட்டணி அமைப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மைத்திரிபால சிறிசேன தலைமையில், சரத் அமுனுகம, நிமால் சிறிபால டி சில்வா, டியுட்டர் ஜெயவர்த்தன, முன்னாள் மேல் மாகாணசபை அமைச்சர் பிறேம் ஜெயசிறி ஆகியோர் அடங்கிய குழுவினரே கூட்டணி அமைப்பது தொடர்பாக ஆராயவுள்ளனர்.

நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தக்கூடிய தேசிய கூட்டமைப்பை அமைப்பது தொடர்பாக இந்த இரு கட்சிகளும் இணைந்து ஆராயும்.(01)

### கலவரத்தை ஏற்படுத்த ஜே.வி.பி. முயல்கிறதாம்!

(கொழும்பு)

நாட்டில் மீண்டும் கலவரங்களை ஏற்படுத்துவதற்கு மக்கள் விடுதலை முன்னணி முயற்சித்து வருவதாக மூன்று அமைச்சர்கள் குற்றம் சாட்டி உள்ளனர்.

அமைச்சர்களான ஜோன் அமரதுங்க, கபீர் காசிம், ஏ.எச்.எம். அஸ்வர் ஆகியோரே நாடாளுமன்ற ஒத்திவைப்பு வேளையில் நடைபெற்ற விவாதத்தின்போது கலந்துகொண்டு,

(10 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 2226297
0712348888 0712349999 074512666 012360290 012360291
email . jaffna @ expoavi . com. (சி -1423)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் தோழன்...

# திலீபனின் 16 ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வின் சில காட்சிகள்









தியாக தீபம் திலீபன்









THE ROYAL COLLEGE OF JAFFNA
ஆண்டு 1 இல் இருந்து மேற் படிப்பு வரை சிறந்த ஆசிரியர்கள், சகல பாடங்கள்!
426 (302), K.K.S. Road, Jaffna. (சி-1457)

நிரஞ்சனாஸ் சங்கானை
அஜீத், லைலா நடித்த
தீனா
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
ULTRA FORCE- 2
(சி-1425)

ராஜா யாழ்ப்பாணம்.
சத்தியராஜ், விஜயலட்சுமி, பாண்டிராஜன் நடித்த
ராமச்சந்திரா
காட்சிநேரம் 10.30, 2.30, 6.30. 9.30 (பு.நே)
(சி-1424)

பத்திரிகை விநியோகஸ்தர் தேவை
தினமும் கிளிநொச்சி சென்று பத்திரிகை விநியோகம் செய்வதற்கு ஆர்வமும், விருப்பும் உள்ளவர்கள் தேவை சொந்தமாக மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்கள் அதற்குரிய ஆவணங்கள் மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றுடன் 29.09.2003 திங்களன்று காலை 10 மணிக்கு எமது அலுவலகத்திற்கு நேரில் சமுகம் தரவும்.
நிர்வாக இயக்குநர்
நமது ஈழநாடு
267 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

"அடுத்தவன் வலி, அடுத்தவன் பசி, அடுத்தவன் தவிப்பு
எப்போது உன்னுடையதாய் உனக்குள் வேதனையைக் கிளப்புகிறதோ
அப்போதே நீ மனிதப் பிறவி" – சத்ய சாயி பாபா

அரும்புகளுக்கு உதவுங்கள் கணக்கு இல- 5-21-2022 431-4
இலங்கை வங்கி (மேற்தரக் கிளை), யாழ்ப்பாணம்.
அரும்புகள் சிறுவர் நிதியம். யாழ். மருத்துவ மாணவர் ஒன்றியம் T.P -021 - 222 2134 ஊடக அனுசரணை நமது ஈழநாடு

# செம்மணி விசாரணை அறிக்கையினை நீதிமன்றில் உடன் சமர்ப்பிக்க உத்தரவு

(கொழும்பு)

யாழ் செம்மணிப்புதை குழிகள் தொடர்பான விசாரணைகள் மற்றும் ஆய்வுகள் தொடர்பான அறிக்கையை உடனடியாகத் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் இரகசியப் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

செம்மணிப் புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணை நேற்று நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையை எதிர்வரும் நவம்பர் மாதம் 14ஆம் திகதிக்கு முன்னர் வழங்குமாறும், நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. செம்மணிப் புதைகுழியிலிருந்து மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளுடன் உறவினர்களிடமிருந்து பெறப்பட்ட இரத்தம் மரபணுப் பரிசோதனைக்காக பிரித்தானியாவுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், அதன் அறிக்கை இதுவரை கிடைக்கவில்லையெனவும், ஆய்வுகள் தொடர்பாக சட்டமா அதிபருடன் ஆலோசனைகள் பெற்றுள்ளதாகவும் குற்றப் புலனாய்வுப் பொலிஸார் தெரிவித்தனர்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 4 ஆம் திகதி வழக்கு விசாரணையை ஒத்தி வைத்த நீதிவான், அன்றைய தினம் இவ்வழக்குகளுடன் தொடர்புடையதாகச் சந்தேகிக்கப்படும் ஆறு படையினரையும் நீதிமன்றத்தில் முன்னிறுத்துமாறும் உத்தரவிட்டார்.



ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்துகொள்ள நியுயோர்க் சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அங்கு இந்தோனேஷிய ஜனாதிபதி மேகவதி சுகர்னோபுத்திரியைச் சந்தித்து கைலாகு கொடுப்பதை படத்தில் காணலாம்.

# இலங்கையின் நிதியுதவியுடன் சவூதியில் சிங்களப் பத்திரிகை

இலங்கை அரசின் நிதியுதவியுடன் சவூதியிலிலுந்து சிங்களப் பத்திரிகை வெளிவரவுள்ளது. வெகுஜனத் தொடர்பு அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தலைமையில், அமைச்சின் செயலாளர் குமார் அபேசிங்க மற்றும் குழுவினர் மத்திய நாடுகளுக்கு மேற்கொண்ட விஜயத்தின் போதே இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளுக்குப் பயணித்த இக்குழு, சவூதி அரேபிய தலைநகர் றியாத்தில் - சிங்கள வேலையாட்களைச் சந்தித்த போது, ஏற்கனவே றியாத்தில் வெளிவரும் தினசரி ஆங்கில நாளிதழின் வார இறுதியில், வாரமொருமுறை தமிழ் பத்திரிகை வெளிவருவதைச் சுட்டிக் காட்டி, அவர்களைப் போல் தமக்கும் ஒரு சிங்கள வாரஇதழ் வேண்டும் என்று கேட்டுக் கொண்டபோதே, அமைச்சர் இதற்கு இணக்கம் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இயங்கும் சிலோன் பத்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் ஒத்துழைப்புடனும், அரசின் நிதிப்பங்களிப்புடனும், இந்தச் சிங்களப் பத்திரிகை றியாத்திலுள்ள 'றியாட் டெய்லி நியூஸ்' என்னும் பத்திரிகை நிறுவனத்தின் கீழ் வெளிவரும் என்று, கொழும்பிலுள்ள வெகுஜனத் தொடர்பு அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது. ஏற்கன்வே றியாட்டில் வெளிவரும் தமிழ் வாரப் பத்திரிகை, எதுவித நிதிப்பங்களிப்புமின்றி, மத்திய கிழக்கில் வாழும் தமிழர்கள் பணம் கொடுத்து வாங்கும் பத்திரிகையாகவே வெளிவந்துகொண்டிருப்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

# அதிகாரப் பகிர்வு யோசனையை நிறுத்தினால் சுதந்திரக் கட்சியுடன் பேசுவதற்குத் தயாராம்!

## விமல் வீரவன்ச தெரிவிப்பு

சிறிலங்கா சுதந்திரக்கட்சி அதிகாரப் பகிர்வு யோசனையை நிறுத்திக் கொண்டால், இரு கட்சிகளும் இணைவதற்கான .பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்க முடியுமென்று, மக்கள் விடுதலை முன்னணியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

பிலியந்தலவில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அதிகாரப் பகிர்வு என்ற பக்கத்தில் ஒரு காலும், தேசிய கூட்டமைப்புப் பற்றிய பக்கத்தில் மறுகாலும் வைத்துக்கொண்டு பயணத்தை மேற்கொள்ளமுடியாது. இந்தச்செயல் இளம்பிள்ளைவாத நோய்க்குரிய தன்மை என்றும் குறிப்பிட்டார்.

மக்கள் விடுதலை முன்னணியின் கஸ்பாவ தொகுதி அமைப்பு தொடர்பாக விமல் வீரவன்ச அப்பகுதி மக்களை சந்தித்துக் கலந்துரையாடிய தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# களத்தில் இறங்கி போராடத் தயார் ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு!

தேவைப்படின் நானும் களத்தில் இறங்கிப் போராடுவேன் என்று சந்திரிகா, புதிதாகப் பயிற்சிபெற்ற இராணுவத்தினரிடம் தெரிவித்தார்.

நாட்டின் இறைமைக்கும் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதோடு, நாட்டை இரண்டாகப் பிரித்துவிட ரணில் அரசு திடசங்கற்பம் பூண்டுள்ளதால், அதைத் தடுத்து நிறுத்த மீண்டும் போரில் குதிக்க வேண்டிய தேவையுள்ளதாகவும், அதனால் இராணுவத்தினரைத் தயார் நிலையிலிருக்கும்படியும் சந்திரிகா அறைகூவல் விடுத்தார்.

நாட்டின் ஜனாதிபதி என்ற முறையிலும், பாதுகாப்புக்குப் பொறுப்பான தலைவர் என்ற வகையிலும், தன்னிடம் நாட்டின் பாதுகாப்பை மக்கள் வழங்கியுள்ளதால், அவர்களது நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்து கொள்ள வேண்டிய தேவை இருப்பதாகக் குறிப்பிட்டு உரையாற்றிய சந்திரிகா, புதிதாகப் பயிற்சி பெற்று வெளியேறும் இராணுவத்தினருக்கே, போருக்குத் தயாராகும்படி அழைப்பு விடுத்தார்.

தற்போதுள்ள தற்காலிக சமாதான முயற்சிகள் விரைவில் குழம்ப வாய்ப்புள்ளதால், தான் மீண்டும் உத்தரவிடும்போது, போராடத் தயார் நிலையில் இருக்கும்படி முப்படைக்கும் தான் அறிவித்துள்ளதாகவும், தொடர்ந்து பயிற்சியெடுத்து போருக்குத் தயாராயிருப்பதுதான் தற்போதைய புத்திசாலித்தனமான விடயம் என்றும் சந்திரிகா குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கும் போதே, தேவ்வையேற்படின், நானும் களத்தில் இறங்கிப் போராடுவேன் என்று, புதிதாகப் பயிற்சி பெற்ற இராணுவத்தினிடம் சூளுரைத்தார்.

# வடபகுதி அரசாங்க அதிபர்களுடன் அரசியற்துறை பொறுப்பாளர் சந்திப்பு

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த அரச அதிபர்கள் - நேற்று முன்தினம் அரசியற்துறைப் பொறுப்பார் சு.ப. தமிழ்ச்செல்வனுடன் கிளிநொச்சியில் சந்திப்பொன்றை நடத்தியுள்ளார்கள். இந்தச் சந்திப்பின்போது- தற்போதைய அரசியல் நிலைப்பாடு, வடபகுயில் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்களில் ஏற்படும் தடங்கல்களுக்கான காரணங்கள், அவற்றைத் தீர்ப்பதற்கான வழிமுறைகள் ஆராயப்பட்டதாக தெரியவருகிறது.

விடுதலைப்புலிகளின் தரப்பில் தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர்களும் கலந்துகொண்டுள்ளார்கள் இச்சந்திப்பானது அரசியற்துறைப் பொறுப்பாளரின் அழைப்பிலேயே நடைபெற்றது.

# உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்!

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு அதியுயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக, அரசாங்கம் உரியநடவடிக்கையை எடுக்காவிட்டால், அரசுக்கு வழங்கி வரும் ஆதரவைப் பரிசீலனை செய்ய வேண்டிவரும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றக் கட்டடத்தில் இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகவியலாளர் மாநாட்டில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டது.

வடக்கு - கிழக்கில் அதியுயர் பாதுகாப்பு வலயம் இருப்பதனால், சுமார் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்து மீளக்குடியமர முடியாமல் உள்ளனர்.

எனவே, உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பாக அரசாங்கம் உரிய நட்வடிக்கை எடுக்கவேண்டும். இந்த விடயம் தொடர்பாகப் பிரதமர் நாடு திரும்பியதும், உயர்பாதுகாப்பு வலயங்களை அகற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதை வலியுறுத்துவோம்.

இதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்காதுவிட்டால், அரசாங்கத்துக்கு வழங்கிவரும் ஆதரவைப் பரிசீலனை செய்யவேண்டிவரும் என்பதை, பிரதமரிடம் தெரிவிக்கவுள்ளதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

## தேர்தல் முறை மாற்றம் தொடர்பாக

# இந்திய தேர்தல் ஆணையாளரின் ஆலோசனையை பெற நடவடிக்கை

இலங்கையின் தேர்தல் முறையை மாற்றியமைப்பதற்கு - இந்திய தேர்தல் ஆணையாளரின் ஆலோசனைகள் பெறப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கையில், தேர்தலை மாற்றியமைப்பதற்காக அமைக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஈடுபட்டுள்ளது.

இதற்காக, நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் தலைவர் தினேஸ் குணவர்த்தன, இந்தியாவின் தேர்தல் ஆணையாளரை இலங்கைக்கு வருமாறு அழைப்பு விடுத்தார்.

அந்த அழைப்பை தேர்தல் ஆணையாளர் ஏற்றுக்கொண்டுள்ளதாகவும், அவர் விரைவில் இலங்கை வரவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க, நேற்று நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் தலைவரைச் சந்தித்து, தேர்தல் முறையை மாற்றி அமைப்பது தொடர்பாகக் கலந்துரையாடினார்.

இந்த கலந்துரையாடலில்- வாக்களிப்பின்போது தேசிய அடையாள அட்டைகளைப் பயன்படுத்துவதில் ஏற்படும் சிக்கல்கள் குறித்து ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## வியாபாரி மூலையில் கிராம வளர்ச்சி விழா

(யாழ்ப்பாணம்)

வியாபாரிமூலை கலைமணி சன சமூக நிலையம் நடத்தும் கிராம வளர்ச்சிவிழா, நர்ளை பிற்பகல் 5 மணிக்கு நிலையத்தில் கி.சிவநேசன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில், சிவஸ்ரீ. சி.வாசுதேவசர்மா் ஆசியுரையை வழங்கவுள்ளதுடன், ப.நாகநாதன், வைத்திய கலாநிதி சி.கதிரவேற்பிள்ளை, பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி, வவுனியா மக்கள் வங்கி முகாமையாளர் மு.சிவநேசன் ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரை வழங்குவர். (116)



அண்மையில் ஜனாதிபதி சந்திரிகாவை பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன சந்தித்து கலந்துரையாடுவதை படத்தில் காணலாம்.

# புதிதாக வைத்தியர்களை நியமிக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை!

(கொழும்பு)

நாட்டில் நிலவும் வைத்தியர்களின் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்யும்முகமாக, உடனடியாக 624 வைத்தியர்களை நியமிப்பதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதனை, அரசாங்க சேவைகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது. இதன்படி, எம்.பி.பி.எஸ் பட்டம் பெற்ற 624 வைத்தியர்கள் இவ்வாறு நியமனம் பெறவுள்ளனர். இதற்கான சுற்றுநிருபங்களை அரசாங்க சேவைகள் ஆணைக்குழு அனுப்பிவைத்துள்ளது.

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தினை சட்டவிதிகளிருந்து நீக்க வேண்டும்

## ரவிராஜ் எம்.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச்சட்டமூலத்தை நாட்டின் சட்ட விதிகளில் இருந்து நீக்க வேண்டும் என்று, தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

மரணதண்டனை அமுல்படுத்தப்படவேண்டுமென்ற பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மரண தண்டனை அமுல்படுத்தப்படுவதை எந்தவொரு தமிழ் மகனும் விரும்பப்போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த காலத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம்பெற்ற படுகொலைகள் தொடர்பாக, விரிவாகச் சுட்டிக் காட்டிய நாடாளுமன்ற உறுப்பினர்,

இந்தச் சம்பவங்களுடன் தொடர்புள்ள நபர்கள் வெளிநாடுகளில் தூதுவர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்றும் தெரிவித்தார்.

### நல்லூர் கோட்டத்தில்

# சைவநெறிப்பாடப் போட்டியில் தெரிவுசெய்யப்பட்டோர் விபரம்

சைவநெறிப்போட்டி - 2003 இல் கலந்துகொண்டு, நல்லூர் கோட்ட மட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட கீழ்க் காணும் முதலாம், இரண்டாம், மூன் றாம் இடங்களைப் பெற்றவர்களுக் கான பரிசளிப்பு வைபவம் இன்று நடைபெறவுள்ளது.

இன்றுகாலை 8.30 மணிக்கு, யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் வித தியாலத்தில் நடைபெறும் இந்த நிகழ் வில், பங்குபற்றுவதற்கான ஒழுங் குகளை மேற்கொண்டு, வெற்றிபெற் றவர்கள் பரிசில்களைப் பெற ஒத்து ழைக்குமாறு பாடசாலை அதிபர்க ளைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

**பேச்சு**

ச.கஜேந்திரன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), ம.அன்பரசன் (யாழ்.இந்துக்கல்லூரி), தெ.சுகிர்தா (கோண்டாவில் இந்து மகா வித்தி யாலயம்).

ம.அருளினியன் (யாழ்.இந்துக் கல்லூரி), ந.ரேணுகா (பெரியபுலம் மகா வித்தியாலம்), வை.மீரா (கொக் குவில் இந்துக் கல்லூரி).

அ.அனுசியா (கொக்குவில் இந்துக் கல்லூரி), இ.லோகப்பிர தாப் (கொக்குவில் இந்துக் கல் லூரி), ஆ.தர்சிகா (கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலயம்).

பு.சிந்துஜா (கொக்குவில் இராம கிருஷ்ண வித்தியாலயம்), இடர்சினி (பெரியபுலம் மகா வித்தியாலயம்), த.வேணுகா (நல்லூர் இந்து த.பெ. பாடசாலை).

பு.சுமதா (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), நீ.நிறோகன் (நல்லூர ஞானோதயா வித்தியாலயம்), நதுஸ் யந்தி (கோண்டாவில் சி.சி. த.க)

**சகலகலா வல்லிமாலை**

ந.பாமினி (கனகரத்தினம் ம.ம.வி), ஜெ.மதுரா (கொக்குவில் இந்துக் கல் லூரி), தே.சுவேந்தினி (கனகரத் தினம் ம.ம.வி)

த.ஜெயடினேஸ் (யாழ்.இந்துக் கல்லூரி), சி.வலஜி (கொக்குவில் இந் துக் கல்லூரி), ப.காயத்திரி (கொக்கு வில் இந்துக் கல்லூரி).

பா.அனுஜன் (பெரியபுலம் மகா வித்தியாலயம்), சி.மோகனான் (பெரி யபுலம் மகா வித்தியாலயம்), ப.சுபோ சினி (கொக்குவில் இந்துக் கல்லூரி).

ரு.ஜேசுதாசன் (கொக்குவில் கிநா.ம.வி), நா.கீர்த்தனா (கனகரத்தினம் ம.ம.வி), உ.தனுசன் (கனகரத்தினம் ம.ம.வி).

ஜெ.தர்சிகா (நல்லூர். ஞானோ தயா வித்தியாலயம்), வே.லக்ஸி (கல்வியங்காடு இ.த.க.பாடசாலை), வி.தனுசன் (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை)

**பண்ணிசை**

க.தர்வுனன் (யாழ்.இந்துக் கல் லூரி), கு.தாரணி (கொக்குவில் இந்துக் கல்லூரி), க.உஜித்தா (பெரி யபுலம் ம.வி). அ.அமிர்தலோசன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), த.கவாஸ்கர் (யாழ்.இந்துக் கல் லூரி), ம.கிஜானி (இந்து மகளிர் கல்லூரி)

பி.சோழராஜன் (யாழ்.இந்துக் கல்லூரி), இ.ரேணுகா (கொக்குவில் இந்துக் கல்லூரி), ர.அன்னபூர்னேஸ் வரி (கொக்குவில் இந்துக் கல்லூரி).

தே.விதுர்சன் (கொக்குவில் இந்துக் கல்லூரி), ம.அழகரசன் (யாழ் இந்துக்கல்லூரி), சி.மனோறோஜ் (கன கரட்ணம் ம.ம.வி).

கு.மயூரதி (இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), செ.பிரவீனா (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), ஜெ.ஜானகி (இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை).

பு.திவ்யா (கொக்குவில் இந்து ஆரம்பபாடசாலை), ச.சோபிதா (இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), த.சுஜீவன் (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை).

ந.சுஜிதா (பெரியபுலம் மகா வித் தியாலயம்), இ.கௌசிகன் (கொக் குவில் இந்துக் கல்லூரி), ந.கிருத் தணிகன் (யாழ். இந்துக் கல்லூரி).

கு.சோபிகா (இந்து மகளிர் கல் லூரி), ந.நிரோஜினி (கொக்குவில் நாமகள் வித்தியாலயம்), பு.ரசிதா (செங்குந்தா இந்துக்கல்லூரி) சி.டல் சினி (கொக்குவில் இந்துக் கல் லூரி).

பா.பிரவீராஜ் (யாழ்.இந்துக் கல்லூரி), ச.ஜீவிதன் (செங்குந்தா இந்துக் கல்லூரி), மா.துவாரகன் (பெரியபுலம் ம.வி)

தி.தர்சினி (யா.முத்துத்தம்பி ம.வி), பா.பாலகஜேந்தினி (முத்துத்தம்பி ம.வி), ச.சசிதா (செங்குதந்தா இந் துக் கல்லூரி).



மானிப்பாய் பிரதேச சபை முன்பள்ளி விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சண்டி லிப்பாய் பிரதேசப் பொறுப்பாளர் ப்வநீதன் தேசியக்கொடி ஏற்றுவதைப் படத்தில் காணலாம் (46)

# மாவட்ட ஆணையாளர் சுன்னாகம் வருகை

லயன் கழக யாழ்.மாவட்ட ஆணையாளர் டாக்டர் இ.றேகன்பெரோ அண்மையில் யாழ்ப்பாணம் வருகை தந்திருந்தார. சுன்னாகம் லயன்ஸ் கழக அழைப்பை ஏற்றே இவர் வருகை தந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

பெரேரா - உடுவில் கிழக்கில் அமைந்துள்ள "வாழ்வகம்" விழிப்புலன் இழந்த மாணவர்கள் பராமரிப்பு நிலையத்திற்கு சென்று, அங்குள்ள நில மைகளை பார்வையிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அங்கு மாணவர்களின் கற்றல் செயற்பாட்டிற்கு அவசியமான ஒலிப்பதிவுக் கருவிகளையும் வழங் கினார். கைதடியில் உள்ள சிறுவர் பாரமரிப்பு நிலையமொன்றுக்கு ஊன முற்ற பிள்ளைகளின் பராமரிப்பு செலவாக பிள்ளை ஒன்றுக்கு மாதாந்தம் ஐநூறு ரூபா வழங்க உறுதியளித்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மலேரியா நோயை அழிக்கும் ஒரு நடவடிக்கையாக, நுளம் புகளின் குடம்பிகளை கொல்லும் மீன்களின் வளர்ப்பையும் ஆணையாளர் ஆரம்பித்து வைத்தார். (110)

# சட்ட விரோதமான மணல் அகழ்வை தடுத்த போராளிகள் இருவர் பொலிஸாரால் கைது

சட்டவிரோத மணல் அகழ்வை தடுத்த இரு விடுதலைப்புலி உறுப்பி னர்களை - பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் வடமராட்சி கிழக்கு பொற்பதி கிராமப் பகுதியில நேற்று முன்தினமிரவு நடைபெற்றுள் ளது. பொற்பதி கிராம மக்களிடையே அரசியல் பணிகளை முன்னெடுத் துக்கொண்டிருந்த கடற்புலிப் போராளிக ளான பாவேந்தன், மதி ஆகியோரே பருத்தித்துறை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் பற்றி மேலும் தெரியவரு வதாவது - வடமராட்சி கிழக்கு மணற் காடு பகுதியில் உரிய அனுமதிப் பத்திரமின்றி, கும்பல் ஒன்று கன்ரர் வாகனமொன்றில் மணல் ஏற்றும் நடவ டிக்கையில் ஈடுபட்டிருந்தது. அவ்வழி யால் வந்த குறித்த இரு போராளி களும், சந்தேகத்தின் பேரில் மணல் ஏற்றிய கும்பலை விசாரித்துள்ளனர். உரிய அனுமதிப்பத்திரமின்றி மணல் அகழும் நடவடிக்கையில் அவர்கள் ஈடுபட்டதால் உடனடியாக மணல் அகழ்வதை விடுத்து, திரும்பும்படி போராளிகள் கூறியுள்ளனர்.

வாகனத்தைத் திருப்பி அனுப்பி விட்டு, பருத்தித்துறை நோக்கி வந்த போராளிகளையே, ஆனைவிழுந் தான் பகுதியில் வைத்து பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த கன்ரர் வாகனத்தைக் கடத்த முயன்றதாகக கூறியே இவர் கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட போராளிகள் இருவரும் பருத்தித்துறை நீதிவான் முன் ஆஜர் படுத்தப்பட்டனர். இருவரையும் எதிர் வரும் 29 ஆம் திகதிவரை விளகக மறியலில் வைக்குமாறு நீதிவான உத்தரவிட்டுள்ளார். போராளிகள் இரு வரும் தற்போது யாழ். சிறைச்சாலை யில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ஓட்டோ தடம் புரண்டது

(யாழ்ப்பாணம்)

அதிவேகமாக வந்த ஓட்டோ வொன்று தலைகீழாக தடம் புரண்டு வீதிக்கு அப்பால் விழுந்தது. இச்சம் பவம் நேற்று வல்லைவெளிப்பகு தியில் இடம் பெற்றது. இதன்போது ஆட்டோ சாரதியான ப.சிறி (வயது29) என்பவர் காயங்களுக்கு உள்ளாகி யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிககப்பட்டுள்ளார்.

அண்மைக் காலமாக, வல்லை' வெளிப்பகுதியில் வாகனங்கள் தடம் புரளும் சம்பங்கள் அதிகரித்துள்ளதா கவும் தெரிவிக்கப்படுகிறது. ஒரு மாத காலப்பகுதிக்குள் நடந்த மூன்றா வது சம்பவம் இதுவாகும். அதே வேளை அதிவேகத்தில் பஸ்ஸை செலுத்தி வந்த வட பிராந்திய போக் குவரத்து சபை சாரதி ஒருவருக்கு பொலிஸார் அபராதம் விதித்துள் ளனர்.

அதிவேகமாக வாகனங்களைச் செலுத்துவோர் மீது இனிக்கடும் நட வடிக்கை எடுக்கப்படும் என பொலி ஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர். அத்துடன் போக்குவரத்து சேவையில் ஈடுபடும் பேரூந்துக்கள் வழி அனு மதிப் பத்திரம் வைத்திருக்க வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது. (111)

# மாணவர் சேமிப்பை ஊக்குவிக்க மக்கள் வங்கியினால் நடவடிக்கை

(நெல்லியடி)

நெல்லியடி மக்கள் வங்கியினால் விக்னேஸ்வராக் கல்லூரி மாணவர் களின் சேமிப்புப் பழக்கத்தை ஊக குவிக்கும் முகமாக 'சிசு உதான' அலகு ஆரம்பிக்கப்படவுள்ளது.

விக்னேஸ்வராக் கல்லூரி அதி பர் தலைமையில் இடம் பெறவுள்ள இந்நிகழ்வில், மக்கள் வங்கியின் யாழ்ப்பாணம் மற்றும் வன்னிட் பிராந்திய முகாமையாளர் க.சிவபாதவிருதயர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

29 ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெறவுள்ள இந் நிகழ்வில், மாண வர்களுக்கான சேமிப்புக் கணக்குகள் ஆரம்பிக்கப்படுவதுடன் ஏற்கனவே கணக்குகள் வைத்துள்ள மாணவர்க ளுக்கும் வைப்புக்களைச் செய்ய லாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## கிளித்தட்டுப் போட்டி

வடமராட்சி கல்வி வலயப் பாடசா லைகளுக்கு இடையேயான கிளித் தட்டுப் போட்டி, எதிர்வரும் 29ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு அல்வாய் சின்னத்தம்பி வித்தியா லய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. பங்குபற்றும் பாடசாலை அதிபர்கள் குறித்த நேரத் திற்கு உரிய ஆவணங்களுடன் போட் டியாளர்களை அனுப்பி வைக்குமாறு, உடற் கல்வி உதவிக் கல்விப் பணிப் பாளர் வே.வல்லிபுரம் அறிவித்துள்ளார்.

# வினாத்தாள் மதிப்பீடு நடைபெறவுள்ளது

வடமராட்சி கல்வி வலயப் பாட சாலைகளில், நடைமுறைப்படுத் தப்பட்டுவரும் க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான கணித, விஞ்ஞான பாட விசேட செயற்திட்ட மாதிரி வினாத்தாள் மதிப்பீடு, எதிர் வரும் ஒக்ரோபர் மாதம் 29 ஆம், 30 ஆம் திகதிகளில் அந்தந்தப் பாடசாலைகளில் நடைபெறவுள்ளது.

வலய, கோட்ட மட்டங்களில் அதிகூடிய புள்ளிகள் பெறும் மாண வர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட வுள்ளது.

விடைத்தாள் திருத்தும் பணிகள் 01-11-2003 சனிக்கிழமை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும் வட இந்து மகளிர் கல்லூரியிலும் நடைபெறும் என பிரதிக்கல்விப் பணிப்பாளர் வி.அருளானந்தம் தெரி வித்தார் (122)

வாழ்க வளமுடன்

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : இ.வினோஜன்
முகவரி : வட்டு கிழக்கு சித்தங்கேணி.

ஆறாவது அகவையில்

பெயர் : சி.நரேன்
முகவரி : பிருந்தாவனம் கோப்பாய்.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------
முகவரி :------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------
பெற்றார் ஒப்பம்

# வார்த்தை விளையாட்டு

**இடமிருந்து வலம்**

1. விடிகாலைப் பொழுது.
3. குறிப்பாக உணர்த்தும் கை, கண் அசைவு.
5. பிறவிலங்கின் இறைச்சியை உணவாக உட்கொள்ளும் விலங்கு (பொதுப்பெயர்).

**மேலிருந்து கீழ்**

2. புளிப்புக் கலந்த இனிப்புச் சுவையுடன்கூடிய கறுப்பு, வெளிர் பச்சைநிற உருண்டையான பழம்.
4. நன்றியாகத் திரும்பிச்செய்யும் பிரதியுபகாரம்.
6. ஆதரவு என்றும் சொல்லலாம்.



# தகவல் களஞ்சியம்

## உங்கள் நுண்ணறிவை நீங்களே மதிப்பிடுங்கள்

சென்ற வார வினாவிற்கான விடைகள்.

(1) 1. அகழ்தல்.
2. அகடவிகடம்.
3. கட்டாந்தரை.
4. தண்டுவடம்.
5. வழிப்போக்கன்.
6. தடம்.

(2)



# விளையாட்டு

எத்தனை பேர் வேண்டுமானாலும், விளையாடக்கூடிய ஒரு விளையாட்டு. கல், பேனா, பென்சில் போன்ற ஒரு சிறிய பொருளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். அதை ஒருவர் மட்டும் அறைக்குள், மற்ற பொருட்கள் அதிகமாக இருக்கும் இடத்தில் (எதையும் மாற்றாமல், கண்ணுக்குத் தெரியும் இடத்தில்) ஒளித்து அல்லது கலந்து வைத்துவிட்டு, வெளியே வரவேண்டும். பின்பு, விளையாடும் அனைவரும் உள்ளே சென்று, அந்தப் பொருளைத் தேடவேண்டும். பொருளைக் கண்டுபிடித்ததுமே, அது எங்கே இருக்கின்றதென்று மற்றவர்களுக்குச் சொல்லாமல், வெளியே வந்து, ஒளித்து வைத்தவரிடம் சென்று சொல்லவேண்டும். இப்படிச் சரியாகக் கண்டுபிடிப்பவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் இடத்திற்கு வந்து அமர்ந்துகொள்ள வேண்டும். முதலில் கண்டுபிடிப்பவர் - அடுத்த ஆட்டத்திற்கான - அடுத்த சிறிய பொருளை ஒளித்து வைக்கவேண்டும்.

## தவளை நீர்க்குளத்தை அடைய வழிகாட்டுங்கள்



இங்கே மடிக்கவும்



# வீரம் - அறிவு = ?




(முற்றும்)



# சிறுவர் அரங்கம்

## நாடுகளைத் தெரிந்துகொள்வோம்

### சுவிட்சர்லாந்து

வாரம் தோறும் அறிந்துகொள்ளும் நாடுகளின் வரிசையில் இந்த வாரம் இடம்பெறுவது சுவிட்சர்லாந்து.

| | |
|---|---|
| தலைநகரம் | - பேர்ன். |
| மொழி | - ஜெர்மன், பிரெஞ்சு, இத்தாலி, ரோமான்ஷ். |
| சமயம் | - கிறிஸ்தவம். |
| நாணயம் | - சுவிஸ் பிராங்க். |
| சராசரி ஆயுள் | - 78.7 |
| முக்கிய நகரங்கள் | - பான், சூரிச், ஜெனிவா, சாக்ஸ்டி |

பனிபடர்ந்த மலை, ஆறு, ஏரி, நீர்வீழ்ச்சி என்று - கண்ணுக்குக் குளிர்ச்சியான இயற்கை காட்சிகள் உள்ளநாடு சுவிட்சர்லாந்து ஆகும். உலகப்புகழ் மிக்க 'அல்ப்ஸ் மலை' இங்குள்ளது. சுதந்திரமான வாழ்க்கை முறையை விரும்பும் மக்களால் உருவாக்கப்பட்ட ஒரு நாடு இதுவாகும். எனவேதான், பல சர்வதேச நிறுவனங்கள் மற்றும் ஐ.நாவின் பல கழகங்கள்- நாட்டின் தலைநகர் ஜெனீவாவில் அமைந் துள்ளன. உலகளவில் வங்கித் தொழிலில் ஒரு உன்னத இடத்தைப் பெற்றது சுவிஸ் வங்கி. இந்த நாட்டில் - கால்நடை வளர்ப்பும், பால் பண்ணைத் தொழிலும் முக்கி யமான தொழில்களாகும். சுற்றுலாத் துறை மூலம் முக்கிய வருமானம் பெற்றுக்கொள்ளப்படுகிறது.


சுவிட்சர்லாந்துப் பாராளுமன்றம்




சுவிட்சர்லாந்தின் இன்னொரு முக்கிய அம்சம் கடிகாரங்கள்.

இங்கு தயாராகும் கைக் கடிகாரங்கள், சுவர்க் கடிகாரங்கள் உலகப்புகழ் பெற்றவையாகும்.

'ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம்' என்ற பட்டப்பெயர் கொண்ட நாடு இதுவாகும்.

# இளந்தேனீக்கள் கழகம் அங்கத்தவர்கள்



முழுப்பெயர் :-
ஆ.வளர்மதி
கற்கும் பாடசாலை :-
யாழ்ற்றன் கல்லூரி.
கற்கும் தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
தகவல் சேகரித்தல், தொலைக்காட்சி பார்த்தல்.



முழுப்பெயர் :-
ச.மரியநிரோஜன்
கற்கும் பாடசாலை :-
நெடுந்தீவு மகா வித்தியாலயம்.
கற்கும் தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
விளையாட்டு, தொலைக்காட்சி பார்த்தல்.

முழுப்பெயர் :- ஆ.சஞ்ஜியா
கற்கும் பாடசாலை :-
பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலை.
கற்கும் தரம் :- 7
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், கவிதை எழுதுதல், கலைகள்.

முழுப்பெயர் :- இ.சஜீவ்
கற்கும் பாடசாலை :-
யாழ்ப்பாணம் யூனியன் கல்லூரி
கற்கும் தரம் :- 7
ஆர்வமுள்ள துறைகள் :-
கதைப்புத்தகம் வாசித்தல், தொலைக்காட்சி பார்த்தல்.

முழுப்பெயர்:- யோ.கலாநந்தினி
கற்கும் பாடசாலை :-
சரசாலை சரஸ்வதி வித்தியாலயம்
கற்கும் தரம் :- 6
ஆர்வமுள்ள துறைகள் :-
கலைகள், விளையாட்டு.

முழுப்பெயர்:- தி.பிரணவி
கற்கும் பாடசாலை :-
சென்ஜோன் பொஸ்கோ
கற்கும் தரம் :- 3
ஆர்வமுள்ள துறைகள் :-
ஓவியம் வரைதல், கவிதை, பாட்டு.

முழுப்பெயர்:- கி.டிபாசினி
கற்கும் பாடசாலை :-
நெடுந்தீவு றோ.க.மகளிர் கல்லூரி
கற்கும் தரம் : 9
ஆர்வமுள்ள துறைகள் :-
கலைத்துறை, வானொலி கேட்டல், சங்கீதம்.

# இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

# இளந்தேனீக்கள் கழகம்

## விண்ணப்பம்

முழுப் பெயர் :..............................................

கற்கும் பாடசாலை :..............................................

கற்கும் தரம் :..............................................

வீட்டு முகவரி :..............................................

பிறந்த திகதி :..............................................

ஆர்வமுள்ள துறைகள் :..............................................

:..............................................

................ திகதி

.............................. ஒப்பம்

.............................. அதிபர்/ஆசிரியர் ஒப்பம்

.............................. பெற்றோர் ஒப்பம்

# தெரிந்துகொள்ளுங்கள்

1. பறக்கும்போது தூங்கும் பறவை எது?
   ஆல்பட்றாஸ்
2. கண்கள் மூலம் வியர்வையை வெளியேற்றும் உயிரினம் எது?
   முதலை

ச.சந்திரதாஸ்
வல்வை மகளிர் மகா வித்தியாலயம்.

இங்கே மடிக்கவும்



# காலமறிந்து பேசுக



'எப்பொழுதும் ஓயாமல் பேசிக்கொண்டிருப்பதால் ஏதாவது நன்மை உண்டா? என்று மாணவர்கள் - ஆசிரியரைக் கேட்டனர்.

'நீங்களேதான் முடிவுக்கு வரவேண்டும். இரவு முழுவதும் ஓயாமல் 'க்ரக் க்ரக்' என்று கத்திக் கொண்டிருக்கும் தவளையையும், எப்பொழுதும் ஓசை எழுப்பிக்கொண்டிருக்கும் வண்டுகளையும் பாருங்கள். இவற்றின் பேச்சால் எமக்குத் தொல்லையே தவிர, நன்மை உண்டா சொல்லுங்கள்' என்று கேட்டார் ஆசிரியர்.

'தொல்லைதான் ஐயா' என்றார்கள் மாணவர்கள். 'அதேசமயம் காலந்தவறாமல் அதிகாலையில் எல்லோரையும் எழுப்பிவிடும் சேவலின் குரலைப் பாருங்கள். அதன் குரல் கேட்டதும், உலகமே விழித்துக்கொள்கிறது. எல்லோரும் சுறுசுறுப்பாக இயங்கத் தொடங்குகின்றனர். சேவலும் ஓயாமல் குரல் எழுப்புவதில்லை. இதிலிருந்து என்ன தெரிகிறது?' என்று மீண்டும் வினவினார் ஆசிரியர்.

'காலமறிந்து பேசினால், காலமறிந்து செயல் புரிந்தால் எல்லோருக்கும் நன்மை விளையுமென்று புரிகின்றது' என்றார்கள் மாணவர்கள்.

# தங்க நாணயம்

வெளிநாடு ஒன்றில் பஞ்சம் ஏற்பட்டது. மக்கள் பசியால் இறக்க ஆரம்பித்தனர். அங்கே பணக்காரர் ஒருவர் இருந்தார். அவர் எல்லாச் சிறுவர்களுக்கும் தினந்தோறும் ஒரு ரொட்டி கொடுத்து வந்தார்.

சிறுவர்கள் அனைவரும் ஒருவரையொருவர் இடித்துத் தள்ளிக்கொண்டு, பெரிய ரொட்டியை வாங்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர். ஓரேயொரு சிறுமி மட்டும் ஓரத்தில் பேசாமல் நின்றுகொண்டிருந்தாள். கடைசியில் கூடையில் ஒரு சிறிய ரொட்டியே மிஞ்சி இருந்தது. அவள் அதை மகிழ்ச்சியோடு எடுத்துக்கொண்டு சென்றாள்.



மறுநாள் மீண்டும் ரொட்டி வழங்கப்பட்டது. அந்த அப்பாவிச் சிறுமிக்கு இன்றும்கூட மிகச்சிறிய ரொட்டியே கிடைத்தது. சிறுமி வீட்டிற்கு வந்து ரொட்டியை பிய்த்தபொழுது, ரொட்டிக்குளிருந்து ஒரு தங்க நாணயம் வெளிப்பட்டது. அவளுடைய அம்மா - 'தங்க நாணயத்தை அந்தப் பணக்காரரிடம் கொடுத்துவிட்டு வா' என்றார். சிறுமி நாணயத்தைக் கொடுக்க ஓடினாள்.

பணக்காரரைப் பார்த்து 'ஐயா என்னுடைய ரொட்டியிலிருந்து இந்த நாணயம் விழுந்தது. ஒருவேளை மாவில் விழுந்திருக்கலாம் என்று நினைக்கிறேன். உங்கள் தங்க நாணயத்தை கொடுக்க வந்திருக்கிறேன். நாணயத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்'' என்றாள். பணக்காரர் - "இது உன் மன நிறைவுக்குக் கிடைத்த பரிசு'' என்றார்.

சிறுமி, தலையசைத்து மறுத்தாள். 'என்னுடைய சந்தோஷத்திற்குப் பயன் எனக்கு அன்றே கிடைத்துவிட்டது. நான் கூட்டத்தில் அடிபடவில்லை அல்லவா'' என்றாள். பணக்காரர் அவளை மிகவும் பாராட்டியதோடு, அவள் படிக்க உதவியும் செய்தார்.

# உங்கள் கைவண்ணம்



கி.கபிலன்
தரம் - 9
யாழ். இந்துக் கல்லூரி.



தரம் - 5
தந்தை செல்வா தொடக்கநிலைப் பள்ளி

# நீலத் திமிங்கலம்



பூமியில் வாழும் மிருகங்களிலேயே பெரியது கடலில் வாழும் புளூவேல் எனப்படும் நீலத் திமிங்கிலம் தான். இது இருபது யானைகளின் நிறைகொண்டது. இதன் குடலில் இரண்டரை தொன் உணவினை அடைக்கலாம். இதன் இரத்தக் குழாய்களில் சிறு குழந்தைகள் ஊர்ந்து செல்லலாம்.

நீலத்திமிங்கிலத்தின் குட்டிகூட 3000 கிலோ எடை கொண்டது. 'கிரில்' என்று சொல்லப்படும் இறால் போன்றவற்றை இது உட்கொள்கிறது.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*பகைஅகத்துச் சாவார் எளியர் அரியர்*
*அவைஅகத்து அஞ்சா தவர்.*

- திருக்குறள் -

## நமது நோக்கு

### வேதாளம் மீண்டும்...

சாத்தியமற்ற விடயங்களை, சாத்தியமாகும் விடயங்களைப் போன்று சர்வசாதாரணமாகப் பேசுவதிலும், அறிக்கை விடுவதிலும் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸுக்கு நிகர் பீரிஸ் அவர்களேதான்.

முன்னர் 90 களின் நடுப்பகுதியில் சந்திரிகா சமாதானப் புறாவென்று பேராதரவு பெற்று, ஆட்சிப்பொறுப்பை ஏற்று ஆட்சிப்பீடத்தில் அமர்ந்தபோது, அவர் பின்னால் அமைச்சராகவே அரசியல் பிரவேசம் செய்த பீரிஸ், சமாதானத்திற்கான தீர்வை உருவாக்குவதற்கென்றே தான் பிறவியெடுத்தவர் போன்று காட்டிக்கொண்டார்.

சந்திரிகாவின் சமாதானப் பேச்சுக்களில் ஆரம்பித்து இன்றுவரைக்கும் அலுப்புச்சலிப்பின்றி அமைதி, சமாதானம், அரசியல் தீர்வு, அதிகாரப் பரவலாக்கம் என அவர் பேசிப்பேசியே காலத்தைக் கழித்து வந்துள்ளார் என்பது அனைவரும் அறிந்த விடயமேயாகும்.

ஆரம்பத்தில் அதிகாரப் பரவலாக்கம் என்ற வார்த்தையை பெருமெடுப்பில் அவர் உச்சரித்துக்கொண்டு இனப்பிரச்சினைக்கான தீர்வுப்பொதி எனப் பிரகடனம் செய்த தீர்வுயோசனைகள் அந்தக் காலத்தில் ஒரு பரபரப்பான 'மாயையை' அரசியல் அரங்கில் தோற்றுவித்த போதிலும், அந்த தீர்வு வரைபுகளில் குறிப்பிடப்பட்டிருந்த பல அம்சங்கள் இரண்டொரு மாதங்களிலேயே அடிச்சுவடற்று அழிக்கப்பட்டு கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதை வேறாகும்.

ஆனாலும் அவர் அந்தத் தீர்வுப் பொதியை ஒரு மந்திர வித்தைக்காரனின் மர்மப்பொருள் அடங்கிய பொதிபோன்று சந்திரிகாவை விட்டுவிலகும் காலம் வரைக்கும் சமாதானத்திற்கான வழியைக் காட்டும் அலாவுதீனின் அற்புத விளக்கு இதுதான் என்று கூறிக்கொண்டு, சுமந்துகொண்டே ஊர் ஊராக நாடு நாடாக அலைந்து திரிந்த கோமாளித்தனம் தமிழ் மக்களால் வெகுவாக ரசிக்கப்பட்ட ஒன்று.

அதிகாரப் பரவலாக்கல் தீர்வுப்பொதியை சுமக்கும் கழுதை போன்று, பத்திரிகைக் கேலிச்சித்திரக்காரர்கள் அவரைப் பரிதாபமாகக் கீறித்தள்ளியதை அவரே ரசித்தும் இருப்பார்.

அவருக்கே தெரியும் அது ஒரு வெற்றுப் பொதியென்று. ஆனாலும், அவர் அந்தப் பொதியில் உள்ள அதிகாரப் பரவலாக்கல் யோசனைகள் பிரச்சினைக்குத் தீர்வுகாண உதவும் எனப் பொதுமக்களையும், சர்வதேச சமூகத்தையும் நம்ப வைக்க முயன்று அலைந்து திரிந்தார்.

இன்னும் தெளிவாகச் சொல்வதானால், சந்திரிகா சமாதானத்திற்கான யுத்தக் கோட்பாட்டின் யுத்த சன்னதத்தை நியாயப்படுத்தி, அனுருத்த ரத்வத்தையையும், சமாதான வடிவத்தையும் வெளிப்படுத்தி மக்களை ஏமாற்றி அமைச்சர் பீரிஸையும் பயன்படுத்தினார் என்றே சொல்லவேண்டும்.

சந்திரிகா இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணும் மனோபாவம் கொண்டவராக இல்லை எனத் தெரிந்து கொண்டும், பீரிஸ் தீர்வுப் பொதியைக் காட்டி அதிகாரப் பரவலாக்கல் தத்துவத்தைப் பெரிதுபடுத்தி, சமாதானம் அதனால் விரைவில் சாத்தியமாகும் எனப் பிரசாரம் செய்தமையானது, அவர் தன் நெஞ்சறியக் கூறிய பொய்யேயாகும்.

சந்திரிகாவின் சாம்ராஜ்யம் மெல்ல மெல்ல சரியும் தன்மையை உணர்ந்ததும்," பொறுத்த சமயத்தில் கட்சி மாறிய பீரிஸ், ஐ.தே.முன்னணி அரசிலும் அமைச்சராகி, அதே சமாதான நகர்வுக்கான பொறுப்பினை ஏற்றதுடன், ரணில் அரசின் போக்கிற்கேற்ப சமாதானப் பாடலைப் பாடத்தொடங்கினார்.

அதிகாரப் பரவலாக்கம் என்ற குரல்- சமஷ்டி என்றும், உள்ளக சுயாட்சி என்றும் சூழற்கேற்ப மாறத்தொடங்கியது.

இப்போதும்கூட ரணில் அரசைக் காப்பாற்ற சமாதானத்தை அவ்வப்போது பல்வேறு தொனிகளில் இசைக்கும் பீரிஸ் - உறுதிபட எதையும் கூறும் வல்லமை கொண்டவராக இல்லை என்பதே உண்மை.

கடைசியாக அவர் விடுதலைப் புலிகள் சமர்ப்பிக்கவுள்ள இடைக்கால நிர்வாகம் தொடர்பான மாற்றுத்திட்ட யோசனைகள் குறித்து, வெளியிட்டுவரும் கருத்துகள், அவரின் உறுதியற்ற கொள்கை நிலைப்பாட்டையா, அல்லது அரசின் உறுதியற்ற கொள்கை நிலைப்பாட்டையா வெளிக்காட்டுகிறது என்பது தெரியவில்லை.

ஆனாலும், சமாதான நடவடிக்கைகளை அரசின் சுயதேவைகளை இலக்காகக்கொண்டே அமைச்சர் பீரிஸும் ஏனையோரும் நகர்த்திச் செல்ல விரும்புகிறார்கள் என்பதை உணரக்கூடியதாக உள்ளது.

அதாவது - விடுதலைப் புலிகளால், சமர்ப்பிக்கப்படவுள்ள யோசனைகளை பொதுமக்களின் அங்கீகாரத்துக்காக சர்வஜன வாக்கெடுப்புக்கு விடப்படும் என்று புதிதாக கருத்து வெளியிட்டிருக்கிறார். பீரிஸ், அதுவும் அத்திட்ட யோசனைகளை நாடாளுமன்றில் சமர்ப்பித்து அங்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவைப் பெற்ற பின்னர்தான், சர்வஜன வாக்கெடுப்புக்கு விடப்படுமாம். நல்லவேளை கடைசியாக ஜனாதிபதியின் அங்கீகாரத்துக்கு அனுப்பப்பட்டு, அதன் பின்னர் மகாசங்கத்தின் ஆசீர்வாதத்துக்கும் அனுப்பப்படும் என்று கூறவில்லை.

நாடாளுமன்றில் மிகப் பலவீனமான நிலையில் தள்ளாடிக் கொண்டிருக்கும் அரசு, மூன்றில் இரண்டு பங்கு ஆதரவைப் பெறுவதென்பது சாத்தியமேயில்லை.

அதன்பின் பெரும்பான்மை - பௌத்த சிங்கள மக்கள் வாழும் சர்வஜன வாக்கெடுப்பு எந்தவகையான முடிவைத் தரும் என்பதைக் கூறவேண்டியதேவையில்லை.

பீரிஸ் சாத்தியமற்றதையே சொல்கிறார். சமாதானம் சாத்தியமாகக்கூடாது என்ற உறுதியோடுதான் சொல்கிறார்.

இடைக்கால நிர்வாகத்திற்கே இந்த நிலையென்றால் நிரந்தரத் தீர்வொன்றுவரும்போது என்ன கூறுவாரோ...

மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை, சர்வஜன வாக்கெடுப்பு என்பதெல்லாம் சந்திரிகா காலத்து கோஷங்களே...

அந்த நிலைக்கே பீரிஸ் திரும்பிக்கொண்டிருக்கிறார் போல் தெரிகிறது.

எல்லாவகையிலும் பார்த்தாலும், சமாதானம் என்பது தூரத்துப் பச்சையாகவே உள்ளது.

அப்படி இருப்பதையே அரசும் விரும்புகிறது போலவும் தெரிகிறது.

## நாடும் நடப்பும்




# சாத்வீகப் போராட்டம் ஒடுக்கப்பட்டதால் ஆயுதப் போராட்டமாக உருவெடுத்தது!

## பேராசிரியர் சிற்றம்பலம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சாத்வீகப் போராட்டத்துக்கு மதிப்புக்கொடுத்த இந்திய அரசு, அதனை நசுக்க முற்பட்டபோதுதான் - அது ஆயுதப் போராட்டமாக மாறியது என, பேராசிரியர் சிற்றம்பலம் தெரிவித்தார்.

நேற்று நல்லூர் ஆலய வீதியில் நடைபெற்ற தியாகி திலீபனின் இறுதிநாள் நினைவு நிகழ்விலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில் - தமிழ் மக்களின் பிரச்சினையானது ஒரு தேசியப் பிரச்சினை. இந்த நாட்டிலே தமிழ்மக்களுக்கு என்ன பிரச்சினை என்பதை அன்றைய தலைவர்கள் அறிந்துகொண்டனர். அப்போதுதான் தந்தை செல்வா கூறினார் - தமிழ் மக்கள் ஒன்றில் சிங்கள பேரினவாதிகளிடம் சரணடையவேண்டும். இல்லாவிடில், எதிர்த்துப் போரிட வேண்டுமெனத் தெரிவித்தார்.

சாத்வீகரீதியிலே போராடிய தமிழ் மக்களுக்குக் கிடைத்த அநீதியினை நாம் நினைவு கூரவேண்டும். ஜனநாயக நாட்டிலே பெரும்பான்மை இனமக்கள் வாழும்போது, எமது சிறுபான்மை இனத்தின் அபிலாஷைகளை பூர்த்திசெய்யமுடியாது. பாரம்பரிய தேசத்தில் வாழும் மக்கள் தமது எதிர்காலத்தை நோக்க வேண்டியுள்ளது.

தமிழ்ப் பிரதேசங்களில் திட்டமிட்ட குடியேற்றத்தினை அன்றைய சிங்களத் தலைவர்கள் செய்தார்கள். இன்று மலையக மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டுள்ளது. சாத்வீகப் போராட்டம் நசுக்கப்பட்ட போதுதான், ஆயுதப் போராட்டமானது தமிழ் மக்களின் வரலாற்றிலே மிகவும் காத்திரமான போக்கில் ஆரம்பித்திருந்தது.

கடந்தகால யுத்தத்தினால் வட-கிழக்கு மாகாணம் அழிக்கப்பட்டு - 18 ஆயிரம் விடுதலைப் புலிகள் வீரச்சாவடைந்து, பல்லாயிரக்கணக்கான மக்கள் இறந்துள்ளனர். இந்தப் போரில் மக்களும் இணைந்து பங்கெடுத்துள்ளனர். இதன் விளைவாக இரண்டு அரசுகள் உருவாகியது. பிரிவுபட்ட நாட்டை ஒன்றாக்க வேண்டுமெனவே பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன.

புலிகள் போரிலும்சரி, பேச்சுவார்த்தை மேசையிலும்கூட சமமாகப் பேசுகின்றனர். நாட்டைப் பிரிப்பதற்குப் பதிலாக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய தீர்வினை பெறவேண்டுமென, புலிகள் அரசிடம் கோரியுள்ளனர். தமிழீழ விடுலைப் புலிகளின் பிரச்சினை இன்று அங்கீகாரம் பெற்ற ஓர் தேசியப் பிரச்சினையாக மாறியுள்ளது. அடக்கு முறைக்கு எதிராக எழுந்த போதுதான், எமக்கு நியாயமான தீர்வினை தருவதென அரசு கூறியுள்ளது.

எமது போராட்டத்தைப் பற்றி மக்கள் மத்தியிலேயே ஓர் தெளிவான இலக்கு இருக்கவேண்டும். நியாயமான இந்தப் போராட்டத்தைப் பற்றி எமது வருங்காலம் தத்துவமாக உணர்ந்து நிற்கின்றது. தியாகி திலீபனின் தியாகம் - தமிழ் மக்களுக்கு நல்ல தீர்வினைத் தரும். தமிழ் மக்களின் நன்மைக்காக திலீபன் ஓர் பெரும் தியாகத்தைச் செய்துள்ளார். உலகமே எமது பிரச்சினையில் அக்கறை கொண்டுள்ளது. எதிர்காலத்தில் எமது உரிமைப் போரை வென்றெடுப்பதில் எமக்குரிமையுண்டு என அவர் மேலும் தெரிவித்தார்.

## முச்சக்கர வண்டிகளின் பாவனையை வரையறுக்க வேண்டுமென கோரிக்கை

முச்சக்கர வண்டிகளின் பாவனையை வரையறுக்க வேண்டும் என்ற கோரிக்கையை, தனியார் பஸ் சேவையின் தலைவர் கெமுனு விஜயரட்ண விடுத்துள்ளார்.

தனியார் பஸ்சேவை இலாபமேற்படாது- நட்டமடைவதற்கும், தனியார் பஸ்சேவையின் வருமானக் குறைவுக்கும், வீதிவிபத்துக்கள் அடிக்கடி ஏற்படுவதற்கும் காரணமாக இருப்பவை முச்சக்கரவண்டிகள் அதிகளவில் பாவனையில் உள்ளமையே என்று, தனியார் பஸ் சேவையின் தலைவர்குறிப்பிட்டார்.

இதன்காரணமாக, முச்சக்கர வண்டிகளின் பாவனையை வரையறுக்கவேண்டும் என்ற கோரிக்கையை கெமுனு விஜயரட்ண விடுத்துள்ளார்.

போக்குவரத்து அமைச்சுக்கு இது தொடர்பாக கோரிக்கையொன்றை அனுப்பிவைத்திருப்பதாகவும், அதற்குரிய பதில் அளிக்கப்படாது போனால் - போராட்டமொன்றுக்கு முகம் கொடுக்கவேண்டுமென்று, தனியார் பஸ் சேவையின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் டீசல் தரக்குறைவாக உள்ளதால், தனியார் பஸ்கள் அடிக்கடி பழுதடைவதாகவும் இதற்குப் பதிலாக தரமான டீசலை இறக்குமதிசெய்ய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் மேலும் தெரிவித்துள்ளார்.

**கூட்டுறவு ஊழியர்கள்**

# உயர்நீதிமன்றில் தாக்கல் செய்த மனுவை விசாரிப்பதற்கு அனுமதி

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தில் கடமையாற்றிய பத்து ஊழியர்கள், தமது அடிப்படை மனிதஉரிமை மீறல் தொடர்பாக, உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவைத் தொடர்வதற்கு நீதிமன்றம் அனுமதிவழங்கியுள்ளது.

மேற்படி, கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் 'சதொச சில்லறை விற்பனை நிலையமென' பெயர்மாற்றம் செய்யப்பட்டு தனியார் மயமாக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக ஜூலை மாதமே ஊழியர்களுக்கு அறிக்கை அனுப்பப்பட்டிருந்தது. இது தொழில் சட்டத்திற்கு மாறானதெனக்கூறியே, அங்கு பணியாற்றும் ஊழியர்களால் இந்த மனுத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தில் பணிபுரிந்தவர்களுக்கு இரண்டு மாற்றுவழிகளைத் தெரிவுசெய்யுமாறு, நிர்வாகம் அறிவித்தது. அதிலொன்று புதிய சதொச விற்பனை நிலையத்தில் இணைவது அல்லது அவர்களுக்கு சேரவேண்டிய மிகுதித் தொகையைப் பெற்றுக்கொண்டு வெளியேறுவது. ஆனால், சில பணியாளர் தமது பணிகளில் இருந்து விலக விரும்பவில்லை. இவர்களது விருப்பத்திற்கு மாறாக, புதிய ஸ்தாபனத்தில் சேருமாறு வற்புறுத்தப்பட்டனர். சுயமாக வேலையை விலக விரும்பியவர்களுக்கு நஷ்டஈட்டுத் தொகையையும் வழங்க நிர்வாகம் முன்வரவில்லை.

எதேச்சாதிகாரமாக நடந்துகொண்ட கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்துக்கெதிராக, போடப்பட்ட இந்த வழக்கு எதிர்வரும் 9 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

இந்த வழக்கு கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம், வர்த்தக அமைச்சர் ரவி கருணாநாயக்க, திறைசேரி காரியதரிசி ஆகியோருக்கெதிராகவே தொடுக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கினை - தனன், எஸ்.அசன் ஆகிய இருவரும் தாக்கல் செய்துள்ளனர். சி.வெலியமுன, கிருஷ்மால் வர்ணசூரிய ஆகிய முன்னாள் பணியாளர்களும் இவர்களுக்கு ஆதரவாக உள்ளனர்.

# சிறுவர்களின் வளர்ச்சியில் அரங்குசார் நடவடிக்கைகள்



எமது சமூகத்தில் தன்னெழுச்சியான கலை, பண்பாட்டு, சமூக உருவாகத்திற்குத் தேவையான மனித ஆற்றல்களை விருத்தி செய்யவேண்டிய வளங்களை, சகல மட்டங்களிலும் பயன்படுத்துவதன் மூலம் - பங்கேற்ற ஆட்சிப் பொறிமுறையைக் கொண்ட சிறந்த அரங்கப் பண்பாட்டைக் கட்டியெழுப்புவதை நோக்கமாகக்கொண்டு செயற்பட்டுவரும் செயற்திறன் அரங்க இயக்கத்தின் - அரங்க களப் பயிற்சிகள், நாடக ஆற்றுகைகள், அரங்க ஊர்வலங்கள் போன்றவற்றை செயற்படுத்தி - அரங்க வளர்ச்சிக்கும், சமூக வளர்ச்சிக்கும் பங்காற்றி வருவது அறியப்பட்டதே. அந்தவகையில், இவர்கள் வளரும் பயிர்களுக்கு உதவுவதான சிறுவர் அரங்கு பற்றிய கருத்தரங்கொன்றினை பல்வேறு இடங்களைச் சேர்ந்த அரங்கப் புலமையாளர்களின் பங்குபற்றுதலோடு ஒழுங்குசெய்திருப்பது கவனத்திற்குரியது. எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 1 ஆம் திகதி சிறுவர் தினத்தை முன்னிட்டு, 27, 28 ஆம் திகதிகளில் இத்தகையதொரு பயன்மிக்க நிகழ்வு எம்பிரதேசத்தில் இடம்பெறுவது - வரவேற்கத்தக்கதும், பாராட்டுக்குரியதுமான அம்சமாகும்.

சிறுவர்கள் தொடர்பான கவனம் உலகின் இன்றைய பிரதான பேசுபொருளாயிருக்கிறது. ஐ.நா சாசனம் உட்பட, உலக வழக்கில் சிறுவர் உரிமைகள் மிகவும் காட்டமாக வலியுறுத்தப்பட்டிருக்கின்றன. உண்மையில் மனித வாழ்வில் சிறுபராயம் முக்கியத்துவப்படுத்தப்படவேண்டிய ஒன்றே. அக்காலத்தில்தான் எமது சிந்தனைகள் உட்பட, வாழ்வின் அத்திவாரமே வளப்படுத்தப்படுகிறது எனலாம். எனவே, செற்நெறியின் மாறுபட்ட பராமரிப்பும், வசதிகளும் சிறுவர்களுக்கு அவசியமானதாகிறது. குடும்பமும், சமூகமும், சூழலும் அவர்களது வளர்ச்சியில் பெரும் பங்கு வகிக்கின்றன எனபது, பல ஆய்வுகளின் பின் கண்டறியப்பட்ட உண்மையே. முக்கியமாக சிறுவரது மனம் சார்ந்த விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படவேண்டியவை. இந்தநிலையில், சிறுவர் மனநிலைகளை புரிந்துகொண்டே, சிறுவர்களை மகிழ்விக்கும் பல செயற்பாடுகளை - உலகளாவிய ரீதியில், பலர் மேற்கொண்டுவருகின்றனர். இம்முயற்சிகளில் அரங்கு மிகவும் முக்கியமான அம்சமாகும்.

இன்றைக்கிருக்கும் நிலையில், அரங்கு இதுவரையான அதன் வரையறைகளையும் தாண்டி, தன்போக்கில் பல மாறுபாடுகளை ஏற்படுத்திவிட்டிருக்கிறது. பொழுதுபோக்கு அம்சமாக சில காலங்களில் இனங்காணப்பட்டிருந்த அரங்க வடிவம் - உருமாறி, சமூகப் பயன்பாடு மிக்க பல அம்சங்களை விளைவிக்கத் தொடங்கிவிட்டது. படச்சட்ட மேடையமைப்புக்கு வெளியே - வெளிகளிலும், தெருவோரங்களிலும், மரநிழல்களிலும் தன் அளிக்கை முறைகளை வடிவமைத்துக் கொண்டமையை, அரங்கின் மிகவும் முக்கியமான ஓர் மைல்கல் என்றே கொள்ளலாம்.

எமது சூழலில் - சிறுவர்கள் போரினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். நாட்டின் ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடுகையில் - வறுமை, போசாக்கின்மை போன்ற பிரச்சினைகள் எமது சிறுவர்களை வெகுவாகப் பாதித்திருக்கிறது. கல்வி, மகிழ்ச்சியான சூழல் என்பவற்றை - கடுமையான போரே அவர்களிடமிருந்து பிரித்திருப்பதை அவர்கள் கூறியே பலமுறை கேட்டறிந்திருக்கிறோம். இந்தத் துயரக்கதைகள் இன்னமும் எம்மத்தியில் இருப்பது கவலை தரும் விடயமல்லவா? பல சமூகக் காரணிகளும் அவர்களின் இந்த நிலைக்கு காரணமாய் உள்ளனவே எனினும், அக்காரணிகளுக்கு கொடிய யுத்தம் ஒன்றே காரணமாய் அமைந்தது என்பது மறுக்க முடியாததே.

கட்டாயக் கல்விச் சட்டம், இலவச பாடநூல்கள், இலவச பாடசாலை வசதிகள் என்பன அமுலில் இருந்தும், பாடசாலை செல்ல வசதியில்லாது ஏங்கும் சிறுவர்களை நாம் தினமும் சந்திக்கிறோம். பாடசாலைகள் தளபாடங்களின்றியும், ஆசிரியர் பற்றாக்குறையினாலும் இடிந்துபோனநிலையில் நடந்துகொண்டிருக்கின்றன. இந்தநிலையில், மகிழ்ச்சி மட்டுமன்றி உணவு மற்றும் சுயாதீன வசதிகள் எதுவுமே இல்லாது, மிகவும் பிற்பட்ட நிலையிலேயே எம் சிறார்களை இனங்காணமுடிகிறது.

இன்றைய புதிய கல்விச் சீர்திருத்தம் ஆரம்பக் கல்விப் பாடத்திட்டத்தினை "மகிழ்ந்து கற்போம்" என்றேகுறிப்பிடுகிறது. ஒவ்வொரு பிள்ளைக்கும் ஏற்றவாறு பாடசாலைக் கல்விச்சூழல் அமைந்திருக்கவேண்டும் என்பதற்காகவே, படசாலைகளில் பூங்காக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இருப்பினும், எமது பிரதேசத்தில் சிறுவர்கள் இருந்து கற்பதற்கேற்ற தளபாடங்களும், கட்டடங்களும் இல்லாத நிலை கவலைதரும் அம்சம்தான்.

எமது சிறுவர்களது மனச்சிக்கல்களுக்கும், வாழ்க்கை சுமைகளுக்கும் தீர்வுதான் என்ன என்ற நிலையில்தான் இப்பிரச்சினைகள் அரங்கினால் வெற்றிகொள்ளப்படத்தக்கவையா என்ற கேள்வியையும் சிந்திக்க வேண்டியிருக்கிறது.

இந்தநிலையில், சிறுவர்களை மகிழ்ச்சியாய் இருக்கச்செய்ய அரங்குசார் நடவடிக்கைகள் மிகவும் துணைசெய்கின்றன என்றே கொள்ளமுடிகிறது. ஆடுதல், பாடுதல், நடித்தல், விளையாடுதல் என - பிள்ளைகளுக்கு மிகவும் ஈடுபாடான அம்சங்கள் சிறுவர் அரங்குகளில் காணப்படுகின்றன. 2000 ஆம் ஆண்டில் யாழ்.மாவட்டத்தில் 65 தடவைகள் மேடையேற்றப்பட்ட 'கூடிவிளையாடு பாப்பா' என்ற நாடகம் அன்று பலரது கவனத்தையும்




ஈர்த்திருந்தது. கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கத்தின் எழுத்துருவுக்கு, அப்போது திரு.தே.தேவானந் அவர்கள் இயக்கம் கொடுத்திருந்தார். எனினும் இந்த நாடகம் 78 ஆம் ஆண்டு முதலே, தார்சீசியஸ் முதலிய பிரபல இயக்குநர்களால் இயக்கப்பட்டு, வாழ்ந்து வந்த ஓர் படைப்பாகும். உண்மையில் கல்வியியலாளர், குழந்தை உளவியலாளர் பலரும் பாராட்டும் வகையில் அதன் அளிக்கை முறை அமைந்திருந்தது. சிறுவர் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு - மிகவும் பலமான ஒரு நாடக ஆற்றுகை அது என்பதை யாரும் மறுக்கமுடியாது.

இது போலவே, செயற்திறன் அரங்க இயக்கத்தினரின் உருவாக்கத்தில் "இடர்கள் கெடுக" ஆற்றுகையையும் குறிப்பிடலாம். அதன் அறிக்கை முறையைக் கருத்தில் கொண்டு - "கூடிப்பறந்து கற்கும் அரங்கு" அது என்கிறார். அதன் இயக்குநர். இதுவும் ஆடுதல் பாடுதல்களை உள்ளடக்கிய நிலையில் உரிய விடயத்தை தக்கவாறு கூறிவிட சாத்தியமாகவே அமைந்திருக்கிறது.

இவ்வாறு, எமது பிரதேச சிறார்களின் பிரச்சினைகளுக்கான தீர்வினை எட்டுவதற்கு அன்றி, தீர்வினை அண்மிப்பதற்கு யாழ்ப்பாணத்தின் சிறுவர் அரங்கவியலாளர்கள் எத்துணை தூரம் முயற்சித்தார்கள் என்ற பார்வையை நாம் மேலும் ஆராயவேண்டியிருக்கிறது. உண்மையில் பல்வேறு நாடகப் புலமையாளர்களும கூடி மேற்கொள்ளும் சிறுவர் அரங்கு பற்றிய கருத்தரங்கு, எம்மை மேலும் தெளிவுறச் செய்யும் என எதிர்பார்க்கலாம். எதிர்காலச் சிறுவர்களின் போக்குகள் பற்றியும் சிந்திக்கலாம்.

எம்மத்தியில் சிறுவர் அரங்க முயற்சிகள் எப்போதாவது பலவருட இடைவெளிகளின் பின்னர் - பல நிதி உதவிகளின் எதிர்பார்ப்புடன் நிகழ்வது சற்ற சங்கடமான நிலைமைதான். இந்நிலை மாறி உருப்பெறுகின்ற சிறுவர் அரங்க முயற்சிகள் யாவும், சிறுவர் அரங்கிற்கான அத்தனை அம்சங்களும் உள்ளடங்கியவாறு இயக்கப்படுதல் வளரும் பலருக்கு உதவியாக அமையும்.

எனவேதான் சிறுவர் அரங்கு பற்றிய சரியான அறிவினையும், அதன் தன்மைகள் பற்றிய பூரண விளக்கங்களையும் அரங்கவியலாளர் மட்டுமன்றி, ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் மற்றும் சிறுவர் தொடர்பாக வேலை செய்யும் அனைவரும் பெற்றிருக்க வேண்டியிருக்கிறது எனலாம். சிறுவர் உரிமைகள், பிரச்சினைகள் தீர்த்தல் தொடர்பாக பணியாற்றும் சிறுவர் நலச்சேவை அதிகாரிகள் பலரும் இவற்றை அறிவதன்மூலம், இலகுவான பல நடைமுறைகளை அணுகமுடியும் என்பது எனது நம்பிக்கை. ஏனெனில், சிறுவர் அரங்கு தொடர்பான இக் கருத்தரங்கு - வளரும் பயிர்களுக்கு உதவும் ஓர் நிகழ்வு.

**கு.லக்ஷ்மணன்**
**யாழ்.பல்கலைக்கழக மாணவன்**

# நலம் பெருக்கும் நவராத்திரி வழிபாடு

'நவராத்திரி' வழிபாடு கன்னிமாதம் எனும் புரட்டாதி மாதத்துப் பூர்வபட்ச பிரதமைத் திதி முதலாக வரும், ஒன்பது இரவுகளிலும் அமாவாசைக்கு முதல்நாள் நோன்புடன் தொடங்கி, உலகமாதாவாகிய உமையம்மையாரின் இன்னருள் பெற்று வாழவிரும்பும் ஒவ்வொருவரும் 'நவராத்திரி' என்னும் அதிசிறந்த விரதத்தைப் பக்தி சிரத்தையுடன் அனுஷ்டித்து வருகின்றனர்.

இவ்வாறாக அனுஷ்டித்த ஒன்பதாம் நாளிரவு கழிந்த பத்தாம் நாள் - 'விஜய தசமி' எனப்படும். இதனை இந்தியாவிலே 'தசரா' என அழைப்பர். நவராத்திரி என்றால் தொடர்ந்து ஒன்பது இரவுகளிலும் நோற்கும் விரதத் திருநாள் என்பது பொருள்.

சிவராத்திரி விரதமோ - ஓர் இரவில் மாத்திரம் விழித்திருந்து அனுஷ்டிக்கத்தக்கது. நவராத்திரி விரதமோ - ஒன்பது நாளிரவும் தொடர்ந்தனுஷ்டித்து, தேவியின் திருவருளைப் பெற்று, பத்தாம் இரவாகிய விஜயதசமியன்று சரஸ்வதி பூசை முடிந்தபின், விரதத்தை நிறைவு செய்வர்.

நவராத்திரி தினங்களில் முதல் மூன்று நாளிரவிலும் உமாதேவி அல்லது துர்க்கை இருவரையும், ஒரே கும்பத்திலும், அடுத்த மூன்று நாளிரவிலும் திருமகளாகிய இலக்குமியை வேறோர் கும்பத்திலும், மற்ற மூன்று நாளிரவிலும் கலைமகளாகிய சரஸ்வதியை இன்னொரு கும்பத்திலுமாக ஆவாகித்துப் பூசைகள் நடைபெறுவது வழக்கம்.

மூன்று தெய்வ உபாசனைகளாலும் முறையே - ஆண்மை, செல்வம், அறிவு என்னும் வீரம், தியாகம், ஞானம் என்பவைகளைத் துர்க்கை, இலக்குமி, சரஸ்வதி முதலிய மூன்று தெய்வங்களாகக் கொண்டு வழிபடப்படுகின்றது.

**துர்க்கை:-**



எருமை முகத்தையுடைய மகிடாசுரன் என்பவன் மிகுபலசாலியாயிருந்து, தேவேந்திரன் முதலிய தேவர்களுக்கு இடுக்கண் விளைவித்து அடக்கியாண்டான். ஒருமுறை அவனது ஏவலாளர் உணவுக்காக மிருகங்களை வேட்டையாடிவரக் காட்டுக்குச் சென்றனர். அக்காட்டிலே தவஞ்செய்துகொண்டிருந்த தேவர்கள் - அவர்களைக் கொன்றுவிட்டனர். இதையறிந்த மகிடன், தேவர்களுடன் போர் பொருதினான். இதனை உமாதேவியார் அறிந்து, துர்க்காதேவியையனுப்பி, அவனைக் கொல்லும்படி ஏவினார். துர்க்காதேவியும் கோபாவேசம் மிக்க கோரவடிவுடன் சென்று, தனது சக்கரப் படையினால் அவனது தலையை அறுக்க, உடனே அவன் யானையானான். யானையை அழித்ததும் குதிரையானான். குதிரையையும் அழிக்க நெருப்பானான். இப்படியே மாறிமாறி பலவித உருவங்களைக் கொண்டான். இறுதியாக களைப்பெய்தியவனாய் பழையபடி எருமைத் தலையுடன் தோன்றினான். அதைக் கண்ட துர்க்காதேவி மேலும் சினங்கொண்டு, அவனைக் கொன்று, அவனது தலையைத் தமது திருவடியால் மிதித்தார். அப்பால் வேறு வடிவங்கொள்ள இயலாது அடங்கி, பின்னர் நற்கதி அடைந்தான். இன்னல்களைக் களைந்து, எம்மை வாழ்வாங்கு வாழ வலிமையைத் தருகின்றவள் துர்க்கை. அவளை முதல் மூன்று நாட்களிலும் உபாசனை செய்கிறோம்.

**இலக்குமி:-**



கிரியா சக்தியாகிய இலக்குமியைச் சிவப்பு அல்லது பச்சை நிறமுடையவளாகவும், செந்தாமரை மலரில் வீற்றிருந்து கஜேந்திரன் என்னும் யானையினால் அபிஷேகம் செய்யப் பெறுபவளாகவும் பாவித்து வணங்குகின்றனர். இவளே, மக்கள் விரும்புவதாகிய இவ்வுலக யோகங்களுக்குள் சிறந்ததானம் எனக் கூறும், எண்வகைப் பொருட்செல்வங்களுக்கு உரியவளாகக் கொள்கிறோம்.

மேலும் அவள் பதுமம் ஆகிய செந்தாமரை மலரில் சதா வீற்றிருப்பதால், அவள் அருளுகின்ற செல்வத்தை 'பதுமநிதி' என அழைத்தனர் ஆன்றோர். அத்துடன் திருமகள், செய்யவள், செங்கமலை, சீதேவி, தனலக்குமி, தான்யலக்குமி, வீரலக்குமி, விஜயலக்குமி, வரலக்குமி முதலிய நாமங்களோடு வணங்கப்படுகின்றாள். செல்வம் மட்டும் எய்திவாழ இலக்குமியை அடுத்துவரும் மூன்று தினங்களிலும் வழிபடுகிறோம்.

**சரஸ்வதி:-**



ஞானாசக்தியாக விளங்குகின்ற கலைமகள், என்றும் அறிவுமயமாக இருக்கிறாள். அறிவுக்கு உறைவிடமாகிய சரஸ்வதியானவள், என்றும் வெள்ளைக் கமலத்தில் வீற்றிருந்து, வெண்ணிற வீணை, வெண்மணி மாலை முதலியவற்றைக் கையினிற் கொண்டு மற்றும் வெண்ணிறமான ஆபரணங்களையும் அணிந்தும், அறிவுமயமாய் விளங்குகின்றாள். கல்வியிற் சிறந்த காளமேகப் புலவர் - கலைமகளின் வடிவினை

'வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்துள் வீற்றிருப்பாள் - வெள்ளை
அரியாசனத்தில் அரசரோடென்னைச்
சரியாசனம் வைத்ததாய்'.

எனப்போற்றுகின்றார்.

கல்விக்கும், கலைக்கும் அதிபதியாக விளங்குபள் கலைமகள்.

இவ்வாறாக மும்மூன்றான ஒன்பது இரவுகளிலும் - சக்தியின் முக்குணங்களாகிய தாமதம், இராசதம், சாத்வீகம் துலங்கும் வகையிலும், முதன்மூன்று நாளிரவும் வீரச்செயலுக்கேற்ற இச்சா சக்தியாகிய, சிவப்பு நிறங்கொண்ட உமை - துர்க்கை வடிவிலும், அடுத்த மூன்றிரவும் - இரக்கச் செயலுக்குரிய பச்சைநிறங்கொண்ட கிரியா சக்தி என்றும், திருமகளாகிய- இலக்குமி வடிவிலும், மீதி மூன்று நாளிரவிலும் - ஞானசக்தி என்னும் வெண்ணிறங்கொண்ட கலைமகளாகிய- சரஸ்வதி வடிவிலும் பாவனைசெய்து வழிபாடாற்றுகிறோம்.

இத்தகு சக்தி வழிபாட்டின் மேன்மையைப் புலப்படுத்தும் நவராத்திரி நேற்று ஆலயங்களிலும், இல்லங்களிலும், பணிமனைகளிலும் கோலாகலாமாக கொலுவைத்து, கும்பம் வைத்து ஆரம்பிக்கப்பட்டது.

மங்களம் பொங்கும் வாழ்வுக்காக ஏங்கும் அனைவருக்கும், இவ்வாண்டு சிறக்க, நவராத்திரி பெருவிழா தொடங்கும். நாடெங்கும் விழா நடந்து, சக்தியின் ஆற்றலைப் பெறட்டும். 'அவனருளின்றி ஒரு அணுவும் அசையாது' என்பது போல் - 'அவனருளால் அவன்தாள் வணங்கி மண்ணில் நல்ல வண்ணம் வாழ' மகத்தான சக்தி வழிபாட்டை செய்வோம், சிறப்புற வாழ்வோம்.

**கவிமாமணி**
**காரை எம்.பி. அருளானந்தன்**

# ஈராக்கின் பக்குவா நகரிலுள்ள சந்தையில் அமெரிக்க படையினர் மீது மோட்டார் தாக்கு!

## இலக்குத் தவறியதில் 8 ஈராக்கியப் பொதுமக்கள் பலி



பக்தாத்திலிருந்து 30 மைல்களுக்கு அப்பாலுள்ள பக்குவா நகரின் சந்தையில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட மோட்டார் தாக்குதலில் 8 ஈராக்கியப் பொது மக்கள் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதல் அமெரிக்கப் படையினரை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்டதாகவும், எனினும் இலக்குத் தவறி பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த தாக்குதலை யார் மேற்கொண்டார்கள் என்று இதுவரை தெரியவரவில்லை எனக் கூறப்படுகிறது.

இதேவேளை, அமெரிக்கப்படையினரின் வாகனத் தொடரணி மீது மேற்கொள் ளப்பட்ட பிறிதொரு தாக்குதலில் ஒரு அமெரிக்கப்படை வீரர் கொல்லப்பட்டார். இருவர் காயமடைந்தனர்.

இதுவரை ஈராக்கில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் 80 அமெரிக்கப்படையினர் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## பலஸ்தீன காஸா பிரதேசத்திலுள்ள அகதி முகாம் மீது

# இஸ்ரேலியப் படையினர் திடீர்த் தாக்குதல்; 3 வயதுக் குழந்தை உட்பட அறுவர் பலி!

காஸா பிரதேசத்தில் இஸ்ரேலிய இராணுவத்தினர் திடீரென மேற்கொண்ட தாக்குதலில் 3 வயதுக் குழந்தை உட்பட 6 பேர் கொல்லப்பட்டனர்.

காஸாவின் பேரிப் பிரதேசத்திலுள்ள பலஸ்தீன அகதி முகாமிற்குள் டாங்கிகள், ஹெலிகொப்ரர்கள் சகிதம் திடீரென நுழைந்த இஸ்ரேலியப் படையினருக்கும், பலஸ்தீனப் போராளிகளுக்கும் இடையில் கடும் மோதல்மூண்டது. இதில், இரு பலஸ்தீனப் போராளிகளும், ஒரு இஸ்ரேலிய இராணுவ வீரரும், ஒரு குழந்தை உட்பட மூன்று பலஸ்தீனப் பொதுமக்களும் கொலலப்பட்டனர்.

இதேவேளை, யூதர்களுடைய புதுவருடம் அண்மிப்பதால், பலஸ்தீனப் போராளி களின் தாக்குதல்களை கட்டுப்படுத்துவதற்காக, இஸ்ரேலில் பாதுகாப்பு ஏற்பாடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் ஒருகட்டமாகவே, இந்த திடீர்த் தாக்குதலை இஸ்ரேல் படையினர் மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பலஸ்தீன ஆன்மீகத் தலைவர் ஷேக் அஹமட் யசீன் - ஹமாஸ் இயக்கத்திடம் இஸ்ரேலுடன் தற்காலிகப் போர்நிறுத்தத்தை மேற்கொள்ளுமாறு கேட்டுள்ள பின்னரே, இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.



# மியன்மார் எதிர்கட்சித் தலைவி மீண்டும் வீட்டுக் காவலில்!



சுகவீனம் காரணமாக வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டிருந்த மியான் மாரின் எதிர்க்கட்சித் தலைவி ஆங் சான்சுகி, நேற்று வைத் தியசாலையிலிருந்து வீட் டுக் காவலுக்கு மாற்றப்பட் டுள்ளார்.

வீட்டுக்காவலிலுள்ள ஆங் சான்சூகியைச் எவரும் சந்திக்கவிரும்பின், இராணுவ ஆட்சியாளர்களின் அனுமதி பெற்றே சந்திக்கமுடியும்.

இதேவேளை, வெளிநாட்டு அழுத்தங்கள் காரணமாகவே - ஆங் சான்சூகிக்கு நடைபெற்ற சத்திரசிகிச்சையை காரணங்காட்டி மியன்மார் இராணுவ ஆட்சியாளர்கள் இவரை மீண்டும் அவரது வீட்டுக்கு அனுப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. எனினும், இவர் தொடர்ந்தும் வீட்டுக் காவலிலேயே வைக்கப்பட்டுள்ளார்.

ஆங் சான்சூகியை தொடர்ந்தும் தடுப்புக் காவலில் வைத்தி ருப்பதற்கு சர்வதேச நாடுகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துவரு கின்றன. இவரை விடுவிப்பதற்கான முயற்சியாக பர்மாவிற்கான இந்தோனேஷியத் தூதுவரும், தாய்லாந்தின் வெளிநாட்டமைச் சரும் இந்த வார ஆரம்பத்தில் பர்மாவின் இராணுவ ஆட்சியாளர் களுடன் பேச்சுகளில் ஈடுபட்டனர்.

அடுத்த மாதம் இந்தோனேஷியாவின் பாலித்தீவில் நடைபெற வுள்ள ஆசியான் மாநாட்டில் பர்மாவும் பங்குபற்ற இருக்கின்றது. இதன்காரணமாகவே, இராணுவ ஆட்சியாளர்கள் ஆங் சான்சூகியை தடுப்புக்காவலிலிருந்து விடுவித்து, வீட்டுக்காவலில் வைத்துள ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மே மாதம் பர்மாவின் இராணுவ ஆட்சியாளர்களுக்கும் ஜனநாயகக் கட்சியான எதிக்கட்சியினருக்கும் நடைபெற்ற மோதலை அடுத்து, ஜனநாயகவாதியான ஆங் சான்சூகியை கைதுசெய்த இராணுவ ஆட்சியாளர்கள், அவரைத் தொடர்ந்தும் தடுப்புக் காவலில் வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உலக நோக்கு

# மாலைதீவுக் கலவரத்தில் இதுவரை நால்வர் பலி!

மாலைதீவு சிறைச்சாலையில் ஏற்பட்ட கலவரத்தில் காய மடைந்த கைதிகளில் ஒருவர் கொழும்பு வைத்தியசாலையில் மரணமானார். இவருடன் சேர்த்து மரணமானவர்களின் எண்ணி க்கை நான்காக அதிகரித்துள்ளது.

மாலைதீவில் கடந்த வாரம் சிறைச்சாலையில் ஏற்பட்ட சம் பவங்களைத் தொடர்ந்து, அங்கு கலவரம் பரவியது. இதனால் பலர் காயமடைந்து கொழும்பு வைத்தியாசாலைக்கு கொண்டு வரப்பட்டமை தெரிந்ததே.

மாலைதீவில் ஏற்பட்ட கலவரங்களைத் தொடர்ந்து, அங்கு பொலிஸ் ஆணையாளராகவும், தேசிய பாதுகாப்பு அதிகாரியாக வும் கடமையாற்றிய பிரிகேடியர் அடம்ஸ் ஷகீரை அப்பதவியிலி ருந்து மாற்றப்பட்டு, தகவல் அமைச்சில் நியமனம் வழங்கப்பட் டுள்ளது.

இதுவரை சிறைச்சாலையில் ஏற்பட்ட கலவரம் தொடர்பாக, 15 சிறைச்சாலை அதிகாரிகள் கைதுசெய்யப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது.

# ஜப்பானில் பூமி அதிர்ச்சி!

ஜப்பான் தீவுகளில் ஒன்றான கொக்காய்டோவில் நேற்று ஏற்பட்ட கடும் பூமியதிர்ச்சியில் 230 இற்கு மேற்பட்ட மக்கள் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த பூமியதிர்ச்சியின் காரணமாக ஏற்பட்ட தீயினால் எண் ணெய் சேமிப்புக் குதங்கள் தீப்பற்றி எரிந்ததுடன், கட்டங்களும் பலத்த அதிர்வுக்குள்ளானதாகத் தெரியவருகிறது.




சிரங்கு சொறிஞ்சவன் கை சும்மா இராது என்று சொல்லுவார்கள். சிரங்கு அரிக்குதோ, இல்லையோ அதைச் சொறிஞ்சு பழகிப்போன கை சும்மா சொறிஞ்சு கொண்டே இருக்குமாம்.

இராணுவத்திலுள்ள சிலருக்கும் இந்தப் பழக்கம் இருக்கிறது. அவர்களுக்கும் - தமிழ் இளைஞர்க ளையோ, மாணவர்களையோ, ஏன் மாணவிகளைக் கூடக கண்டால் அவர்கள் ஏதோ கடத்தல் தொழில் புரிகிறவர்கள் மாதிரிக் கடுமையாகச் சோதித்து நேரத்தை வீணாக்கிக் காலத்தைக் கடத்துவார்கள்.

இது அவர்களுக்கு ஒரு விளையாட்டு அல்லது வேடிக்கையாக இருக்கலாம். பயணம் செய்பவர்க ளுக்குத்தான் அதன் தொல்லை தெரியும்.

தலைவர் பிரபாகரனைச் சந்திப்பதற்காக உலகின பல பாகங்களிலிருந்தும் உலகத் தலைவர்கள் பலர் வந்து போயிருக்கிறார்கள்.

கொழும்பிலிருந்து பல தலைவர்களும் வன்னிக்கு வந்து திரும்பினர். சிலர் தலைவரைச் சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றனர்.

கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில சிங்களப் பத்திரிகைகள் ஒரு காலத்தில் தலைவர் பிரபாகர னின் உருவப்படங்களைப் பிரசுரிப்பதற்குப் பயந்து வெளியிடாமல் இருந்தன.

புரிந்துணர்வு ஒப்பந்தத்துடன், தலைவர் பிரபாகர னின் படங்கள் சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைக ளிலும், சிங்கள சஞ்சிகைளிலும் போட்டி போட்டுக் கொண்டு வெளியிடப்பட்டன.

சில தினங்களுக்கு முன்னர்தான் - கொழும்பில், பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில், நான்கு நாட்கள் நடைபெற்ற உலகப் புத்தகச்சந்தையில், இந்தியரான நாராயணசாமி எழு தய, கொழும்பில் சிங்களப் புத்தக வியாபாரிகளான விஜிதயாப்பா கம்பனி வெளியிட்ட பிரபாகரன் பற்றிய புத்தகம் அதிகளவில் விற்பனையாகி முடிந்தன.

நிலைமை இப்படியிருக்க, வவுனியாவில் பாடசா லைப் பிள்ளைகளைப் பொங்குதமிழ் விழாவில் சேர்த் துக்கொள்ளக்கூடாது என்று யாரோ ஒரு பட்டா ளக்காரன் சொன்னதால் தலைவர் பிரபாகரனின் உருவப்படத்தையும், புலிக்கொடியையும் கைகளில் ஏந்திய குழந்தைகளே விழாவின் தொடக்கத்தில் பெருமளவில் இடம்பிடித்தனர்.

வவுனியா பொங்குதமிழ் நிகழ்வில் கலந்துகொண் டபின், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவரும் மற்றும் சில மாணவர்களும் யாழ்ப்பாணம் திரும்பினர். இவர்கள் முகமாலையில் படையினரின் கடும் சோதனைக்குள்ளாக்கப்பட்டனர். நீண்ட நேரம் ஒவ்வொருவரும் தனித்தனியாகச் சோதிக்கப்பட்ட பின்னர், அவர்கள் பயணம் செய்த மோட்டார்வானும் கடுமையாகச் சோதிக்கப்பட்டது.

எல்லாம் முடிந்தது. மோட்டார் வானின் முன்பக் கக் கண்ணாடியில் வைக்கப்பட்டிருந்த தலைவர் பிரபாகரனின் படத்தைக் கழற்றிவிட்டுத்தான் போக வேண்டும் என்று ஒரு பட்டாளக்காரன் சொன்னார். மற்றும் சிலரும் இதற்குத் தலையாட்டினர்.

மாணவர்கள் மறுத்தனர். இதுவென்ன புரிந்து ணர்வு ஒப்பந்த மீறலா, போர்நிறுத்த உடன்பாட்டு மீறலா?

மாணவர்கள், தலைவரின் படத்தை எடுக்க முடி யாது என்று பிடிவாதமாக மறுத்தனர். வாக்குவாதம் முற்றியது. கைகலப்புத் தொடங்கும் நிலை தோன்றி விட்டது.

இராணுவ அதிகாரி ஒருவர் தலையிட்டு நிலைமை யைச் சமாளித்தார். மாணவர்கள் தலைவர் படத்து டன் வானில் திரும்பினர்.

இராணுவத்தினருக்கு இங்கு வேலையுமில்லை. சும்மா நிற்பதென்பது சிரமம்தான். இவர்கள் இப்படி ஏதாவது செய்து கொண்டுதானிருப்பார்கள்.

இப்படியான மாணவர்கள் - இளைஞர்களுடன், இவர்கள் முறுகிக்கொண்டு அவர்கள் குண்டு வைத் திருந்தார்கள். துப்பாக்கி வைத்திருந்தார்கள் என்று தடுத்து வைத்துத் தாக்கித் தொல்லையைத் தேடி வைக்கப்போகிறார்கள்.

அவர்கள் போருக்கு முதலில் போகமாட்டார்கள் என்று சில வாரங்களுக்கு முன் பாதுகாப்பு அமைச் சர் சொல்லியிருந்தார்.

அவர்கள் போருக்குப் போகமாட்டார்கள் ஆனால், சொறிஞ்சு வில்லங்கத்தை விலைகொடுத்து வாங்கக் கூடியவர்கள் என்பதை நினைவில் வைத்திருந்தால் நல்லது!

# ஈராக்கில் அடுத்த ஆண்டில் புதிய அரசு அமையும்; அமெரிக்க இராஜாங்க அமைச்சர் பவல் தெரிவிப்பு!



(பக்தாத்)

அடுத்த ஆறுமாத காலப்பகுதிக்குள் ஈராக்கில் புதிய அரசியலமைப்பை உரு வாக்குவதன் மூலம் அடுத்த ஆண்டு அங்கு புதிய அரசொன்றை அமைக்கமு டியும் என்று, அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவல் நியூயோர்க் சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் தெரி வித்துள்ளார்.

அமெரிக்கப்படையினர் மீதான தாக்குதல்கள் அண்மைக்கால மாக ஈராக்கில் அதிகரித்து வருவதனால், சர்வதேச நிறுவனங் களின் பிரதிநிதிகளின் எண்ணிக்கையை அங்கு குறைக்கவேண்டும் என்று ஐ.நா தீர்மானித்துள்ளது. இதனால், ஈராக்கினை நிர்வகிக் கின்ற அமெரிக்க சார்பு ஆளுநர்சபை தங்களுக்கு இன்னும் சிக்கல் அதிகரிக்கும் என்று கருதுவதாலேயே, தேர்தல் ஒன்றை நடத்தி ஈராக்கியர்களிடமே ஆட்சிப் பொறுப்பை ஒப்படைக்க இருப்பதாக கொலின் பவல் தெரிவித்தார்.

அமெரிக்கா தொடர்ந்தும் ஈராக்கின் ஆட்சிப் பொறுப்பை தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதால் - சர்வதேச நாடுகளின் எதிர்ப்பையும் எதிர்நோக்குவதோடு, சதாமின் ஆதரவுப் படைக ளின் தாக்குதல்களும் இன்னும் அதிகரிக்கலாம் என்று கருதுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனாலேயே ஈராக்கி யரிடமே ஆட்சிப் பொறுப்பை ஒப்படைக்கும் முடிவுக்கு அமெரிக்கா வந்திருப்பதாக, அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu

The Leading Daily of Tamils' Homeland

# தகவல் தொழில்நுட்பத்துறையில் நாடு பெரியசவாலை சந்திக்கிறது

## ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

தகவல் தொழில்நுட்பத்துறையில் நாடு மிகப் பெரிய சவாலை சந்திக்கும் அதேவேளை, நாட்டின் சகல முன்னேற்றங்களும் தகவல் தொழில்நுட்பத்திலேயே தங்கியுள்ளது என ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்தார்.

கொத்தலாவல இராணுவ பயிற்சிக் கல்லூரியின் 13 ஆவது பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு பேசியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில் - இந்த இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் பல பெண்கள் பயிற்சியை முடித்து வெளியேறியுள்ளனர். இராணுவத்திற்கு பெண்மணி ஒருவர் தளபதியாக வரலாம் எனவும் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில் - 144 இலங்கை இராணுவத்தினரும், 2 பங்காளதேஷ் படையினரும் தமது இராணுவப் பயிற்சிப்பட்டத்தினை பெற்றனர்.

இதில் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ, கொத்தலாவல இராணுவப் பயிற்சிக் கல்லூரி இராணுவ அதிகாரி டெனிஸ் பெரேரா என்பவர்களும் கலந்துகொண்டனர்.

### வருடாந்த பெருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.நக்கா வீதி புனித திரேசம்மாள் ஆலய வருடாந்த பெருவிழாவில் - இன்று மாலை 5.30 மணிக்கு நற்கருணைப் பெருவிழாவும், நாளை 7 மணிக்கு திருநாள் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படும். தொடர்ந்து அன்னையின் திருச்சொரூப பவனி இடம் பெறும்.

### இனந்தெரியா...

இவர், முன்னாள் ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அவரது வீட்டுக்கண்மையில் வைத்து தலையில் சுடப்பட்டு படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியில் மரணமடைந்தார். மரணமடைந்த இவரது சடலம் கல்முனை தள வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (07)

# தியாகி திலீபன் நினைவுநாள் நிகழ்வு...

தேசிய எழுச்சிப்பேரவைச் செயலாளர் சொலமன்சு.சிறில், அருட்திரு. ஜெயக்குமார் அடிகள், சர்வேஸ்வரக் குருக்கள் ஆகியோர் திலீபனின் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தினர்.

மலரஞ்சலி நிகழ்வு நடைபெற்று முடிந்ததும், தியாக தீபம் திலீபனின் நினைவுத்தூபி அமைந்துள்ள இடத்திலிருந்து பேரணி ஆரம்பமாகியது. பாடசாலை மாணவர்களின் பாண்ட அணிவகுப்பு முன்செல்ல, அவர்களின பின்னே திலீபனின் உருவப்படத்தைத் தாங்கியவாறு மாணவர் சென்றனர்.

ஊர்திப் பவனி நல்லூர் ஆலய முன்றலைச் சென்றடைந்ததும், நல்லூர் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் பாலா மாஸ்ரர் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

மாணவர்களால், தாங்கிச்செல்லப்பட்ட தியாகி திலீபனின் உருவப் படம், விசேடமாக அமைக்கப்பட்ட நினைவுப் பந்தலில் வைக்கப்பட்ட பின்னர், பொதுச்சுடர் ஏற்றும் நிகழ்வு இடம்பெற்றது.

பொதுச்சுடரினை நல்லூர் கோட்ட மகளிர் அரசியற்துறை பொறுப்பாளர் பூமகள், மாவீரர் கப்டன் சேரனின் தந்தையார் நடராஜா, கோப்பாய் மற்றும் யாழ்ப்பாணப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர், சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் குமாரவேல், வணபிதா நிக்லஸ் அடிகள் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

அடுத்து தமிழீழத் தேசியக் கொடியை, யாழ். மாவட்ட கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் நிசாந்தன் மாஸ்ரர் ஏற்றிவைத்தார். தியாக தீபம் திலீபன் உண்ணாவிரதமிருந்த இடத்தில் வைக்கப்பட்டிருந்த தியாகி திலீபனின் உருவப்படத்திற்கு மாவீரர் கவிப்பிரியாவின் தந்தையார் இராசன் ஈகச்சுடரை ஏற்றிவைத்தார்.

யாழ்.மாவட்ட அரசியற்துறை பொறுப்பாளர் சி.இளம்பரிதி தியாகி திலீபனின் உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்தார்.

தொடர்ந்து யாழ்.பல்கலைக்கழக உயர்பட்டப்படிப்புகள் பீட பீடாதிபதி பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் சிறப்புரையாற்றினார்.

திலீபன் வீரச்சாவடைந்த நேரமாகிய காலை 10.48 மணிக்கு சகல நிகழ்வுகளும் இடைநிறுத்தப்பட்டு, நிகழ்வில் கலந்துகொண்ட அனைவரும் எழுந்துநின்று மௌனஅஞ்சலி செலுத்தினர். சர்வேஸ்வரக் குருக்களின் நினைவுரையைத் தொடர்ந்து சகல நிகழ்வுகளும் நிறைவுபெற்றன.

**வடமராட்சியில்**

வடமராட்சிக் கோட்டத்தில் அல்வாய் அம்மன் கோவிலில், தேசிய எழுச்சிப்பேரவையின் செயலாளர் துரைசத்தியசீலன் தலைமையில் தியாக தீபம் திலீபனின் இறுதிநாள் நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில், பொதுச்சுடரை வடமராட்சிக் கோட்டப் பொறுப்பாளர் தயா ஏற்றினார். மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கயல்விழி தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். ஈகச்சுடரை மாவீரர்கள் கல்பனா, பவளராணி ஆகியோரின் தாயார், மாவீரர் றோமின் தந்தையார் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

மாவீரர் அருணாவின் தந்தையாரும், விடுதலைப் புலிகளின் பிரமுகர்களான அமிர்தாப், லோறன்ஸ் ஆகியோரும் திலீபனின் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டவர்களுக்கு கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் திருவேந்தன் நிராகாரம் வழங்கி நிகழ்வை நிறைவுசெய்தார்.

**தென்மராட்சியில்**

தென்மராட்சி கோட்டத்தில், மீசாலை வெள்ளைமாவடிப் பிள்ளையார் ஆலய முன்றலில் காலை 10 மணிக்கு வர்த்தக சங்கத் தலைவர் க.வேதநாயகம் தலைமையில் திலீபனின் இறுதிநாள் நினைவு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

பொதுச்சுடரை தென்மராட்சி தேசிய எழுச்சிப்பேரவையின் செயலாளர் க.சந்திரசேகரம் ஏற்றிவைக்க, தேசியக் கொடியை மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் அன்பு ஏற்றிவைத்தார். ஈகச்சுடரை வர்த்தக சங்க உபதலைவர் க.பரமலிங்கம் ஏற்ற மலர்மாலையை கோட்ட அரசியல் பொறுப்பாளர் கலைவாணன் அணிவித்தார்.

**தீவகத்தில்**

நேற்றுக் காலை 9.30 மணியளவில் நெடுந்தீவு மத்திய மகாவித்தியாலயத்தில் திலீபன் நினைவுச்சுடர் அமைந்திருக்கும் பகுதியிலிருந்து ஆரம்பமாகிய திலீபனின் உருவப் படத்தைத் தாங்கிய மாணவர்களின் அணிவகுப்பினைத் தொடர்ந்து திலீபனின் இறுதிநாள் நினைவு நிகழ்வு ஆரம்பமானது. அணிவகுப்பு நடைபெற்றுக்கொண்டிருந்த சமயம் வீதியின் இருமருங்கிலும் நின்று பெருந்தொகையான மக்கள் திலீபனுக்கு அஞ்சலி செலுத்தினர்.

இந்நிகழ்வில், நெடுந்தீவு மக்கள் ஒன்றியத் தலைவர் பி.மரியாம்பிள்ளை பொதுச்சுடரை ஏற்றிவைத்தார். நெடுந்தீவு அரசியற்துறை பொறுப்பாளர் கண்ணன் தேசியக் கொடியை ஏற்றினார். திலீபனின் உருவப்படத்திற்கான ஈகச்சுடர் ஏற்றல் மற்றும் மாலை அணிவித்தல் என்பன மாவீரர்களின் பெற்றோரால் மேற்கொள்ளப்பட்டன.

## நாற்சந்தி



நாட்டிலுள்ள சில ஊடகங்கள் இராணுவத்தினரைப் பற்றி தவறான கருத்துக்களை வெளியிட்டு வருவதால், அவர்கள் மனமுடைந்து போகின்றனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

படையினரின் நலனில் ராஜபக்ஷ காட்டும் அக்கறை சரியானதுதான் ஆனால், இதே ஊடகங்களில் பல தமிழ் மக்களைப் பற்றியும், விடுதலைப் புலிகளைப் பற்றியும், தமிழர்கள் பிரச்சினை குறித்தும், மிகவும் மோசமாக, கொச்சைத்தனமாக, இன வெறியைத்தூண்டும் விதத்திலும், தமிழ் மக்களுக்கு எதிரான உணர்வலைகளை கிளர்ந்தெழவைக்கும் முறையிலும் வேண்டுமென்றே பொய்யான பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனவே... அது ஏன் அவருக்குத் தெரியவில்லை.

இந்தப்பிரசாரங்கள் மறைமுகமாக படையினரையும் இனவாத நோக்கில் செயற்படவைக்கின்றனவே...அதை ஏன் ராஜபக்ஷ உணரவில்லை. அவரது கட்சியின் ஊடகங்களே அதைத்தான் செய்கின்றன. அவரது கட்சியின் பிரமுகர்களும், அதைத்தானே செய்கின்றனர். 'படையினர் பாதிக்கப்படக்கூடாது, தமிழர்கள் பாதிக்கப்படலாம் ஏனென்றால் படையினர் தமிழர்களல்லவே...?'

'எதிர்க்கட்சித் தலைவர் தமிழ்மக்களின் எதிர்க்கட்சி தலைவராகவே தன்னை நினைக்கிறார் போலும்.... என்கிறார், பேப்பர் கடை பெரிய தம்பியர்...'

-தெருவாசி

# செடக் நிறுவன உறுப்பினர்கள் திருகோணமலைக்கு விஜயம்!

செடக் நிறுவனத்தைச் சேர்ந்த 42 சிங்கள இளைஞர், யுவதிகள் நேற்று திருகோணமலைக்குச் சென்றுள்ளனர்.

சமாதான காலத்தில் கிழக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாகவும், மக்களின் வாழ்க்கை நிலையை அறியவும், சமாதானத்தை தொடர தங்களின் பங்களிப்புப்பற்றியும் இவர்களது விஜயத்தின் நோக்கம் அமைந்துள்ளது.

இன்று கும்புப்றுபிட்டி, குச்சவெளி பிரதேசங்களுக்கு தலா இருவர் வீதம், ஒரு வீட்டிற்குச் சென்று அவர்களது நிலைமைகளைக் கேட்டறியவுள்ளனர். நேற்று திருமலை சென்ற இவர்கள் அங்கு நடந்த திலீபனின் இறுதி நாள் நிகழ்வுகளிலும் கலந்து கொண்டனர். (04)

### கலவரத்தை...

இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தனர். பட்டதாரிகள், பல்கலைக்கழக மாணவர்கள், அரச அலுவலர்கள், தொழிலாளர்கள் ஆகியோரைப் பயனபடுத்தி கலவரங்களை ஏற்படுத்துவதற்கு அக்கட்சி முயன்றுவருவதாக அவர்கள் தெரிவித்தார்.


## யாழ்.மத்திய கல்லூரி
## புதிய அனுமதி-2004

தரம் 01, தரம் 06 ஆகிய வகுப்புகளுக்கு அனுமதி கோரும் மாணவர்கள் சனி, ஞாயிறு, பொதுவிடுமறை நாள்கள் தவிர்ந்த ஏனைய நாள்களில் மு.ப. 09.00 மணியிலிருந்து பி.ப. 04.00 மணிவரை கடமை நேரத்தில் கல்லூரியின் பிரதான அலுவலகத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவுத் திகதி 15.10.2003.**

நேர்முகத் தேர்வு, அனுமதித்தேர்வு திகதிகள் விண்ணப்பத்தாரிகளுக்கு பின்னர் அறிவிக்கப்படும்.

**குறிப்பு:** ஏனைய வகுப்புக்களுக்கான விண்ணப்பங்கள் வகுப்பின் வெற்றிடங்கள் இன்மையால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(சி-1605)



## நல்லூர் பிரதேச சபை
## ஆதனவரி அறிவித்தல் - 2003
### நல்லூர்/கொக்குவில் உப-அலுவலகங்கள்

2003 ஆம் ஆண்டு மூன்றாம் கந்தாயத்துக்கான ஆதனவரியை 30.09.2003 ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்பாக எவ்வித தண்டமுமின்றி இந்த அலுவலகத்தில் செலுத்தலாமெனவும், குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் செலுத்தப்படும் வரிப்பணத்திற்கு மேலதிகமாக கீழ்விபரப்படி தண்டப்பணம் அறவிடப்படும்.

| | |
|---|---|
| வெற்றுக்காணிகள் மற்றும் குடியிருப்புக் காணிகள் | - 15% |
| ஏனைய காணிகள் | - 20% |

நிலுவை உட்பட 2003 ஆம் ஆண்டுக்கான வரியைச் செலுத்தி ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். குறித்த நிலுவை செலுத்தாத பட்சத்தில் 1987 ஆம் ஆண்டின் பிரதேசசபைகள் கட்டளைச்சட்டம், இல. 134 (5) இன்படி நடுக்கட்டல் மூலம் அசைவுள்ள பொருட்கள் கைப்பற்றப்பட்டு அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகிறேன்.

செல்லையா செல்வரத்தினம்
செயலாளர்,
பிரதேசசபை,
நல்லூர்.

நல்லூர் பிரதேசசபை,
திருநெல்வேலி,
26.09.2003.

(சி-1604)


## மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1550 திகதி: 26.09.2003

வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| X | 7 | 6 | 2 | 5 | 0 | 4 |






இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 27.09.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.